பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 182
ஞாயிற்றுக்கிழமை
26 மே 2024
வைகாசி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி




# பொதுவேட்பாளரை நிறுத்துமளவுக்கு தமிழர்களுக்கு ஒற்றுமையில்லை!!!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விக்னேஸ்வரனின் வீடுதேடிச் சென்று தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 26**

பொதுவேட்பாளரை தமிழர்களால் ஒற்றுமையாக முன்னிறுத்த முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

15

## தமிழ்ப் பொதுவேட்பாளர் விரைவில் தீர்க்கமான முடிவு

யாழ்ப்பாணம், மே 26

வடக்கு-கிழக்கிலிருந்து தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது தொடர்பாக நீண்ட உரையாடல்களை நாங்கள் நடத்தியிருப்பதுடன் இந்த முடிவு கொள்கை ரீதியில் ஒரு சரியான முடிவு என்பதையும் ஏற்றிருக்கின்றோம்.

15

## மாகாணத்துக்கு காணி அதிகாரம் முழுமையாக வழங்கவேண்டும்

### ரணிலிடம் கோரிய சுமந்திரன்

கிளிநொச்சி, மே 26

அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்னெடுக்கும் முயற்சிகளுக்கும், காணி அதிகாரம் கொடுக்கும் இந்த உறுதி வழங்கும் முயற்சிக்கும் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறோம். அதே வேளை, மாகாணத்துக்குள்ள காணி அதிகாரத்தையும் முழுமையாக வழங்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற காணி உரித்து வழங்கும் நிகழ்வில் பங்கேற்று

05



கிளிநொச்சியில்

## பேசாலையில் வாள்வெட்டு

மன்னார், மே 26

பேசாலை முருகன் கோவிலடி ஏழாம் வட்டாரத்தில் நடைபெற்ற வாள்வெட்டில் குடும்பத் தலைவர் ஒருவர் பலத்த காயங்களுடன் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவமானது கடந்த

05

## உரத்தைப் பயன்படுத்தி புலிகள் ஆயுத உற்பத்தி!

### 21 வருடங்களின் பின்னர் ரணில் கூறிய தகவல்

கிளிநொச்சி, மே 26

வன்னியை புலிகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோது இந்தப் பகுதிக்கு விவசாய உரங்களை அனுப்புவதற்கு நாம் பயந்தோம். ஏனெனில் அதைப் பயன்படுத்தி புலிகள் ஆயுதங்களை தயாரிப்பார்கள் என நாம் அச்சமடைந்தோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காணி உரிமையை அனைவருக்

05

## மகளிர் சுகாதார நிலையம் ஜனாதிபதி ரணில் திறப்பு

கிளிநொச்சி, மே 26

நாடளாவிய ரீதியில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் அரசாங்க வேலைத்திட்டத்தின் கீழ், நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியில் 5 ஆயிரத்து 320 மில்லி

05

## ரணிலுக்கு எதிரான போராட்டத்துக்குத் தடை

விரிவு :- பக். 05

## மீன்பிடி சட்டத்திருத்த வரைவு வடக்கில் கலந்துரையாடல்

### மனுவும் கையளிப்பு

யாழ்ப்பாணம், மே 26

வடமாகாண கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அரசால் கொண்டுவரப்படவுள்ள மீன்பிடி சட்டத்திருத்த வரைவு சம்பந்தமாக வடக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆலோசனைகளையும் கருத்துகளையும் கேட்டறியும் முகமான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நேற்று

05

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுந்த குழிக்குள் மீண்டும் நாட்டு மக்கள் விழக்கூடாது

## இம்தியாஸ் எம்.பி. அறிவுரை

கொழும்பு, மே 26

**வரலாற்றில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு புத்திசாலித்தனமான தீர்மானம் எடுப்பது நாட்டு மக்களின் பொறுப்பாகும். விழுந்த குழியில் மீண்டும் விழக்கூடாது.**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதித் தேர்தல் எமது நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் நடத்தப்படவேண்டும். அதை மாற்றமுடியாது.

வரவிருக்கும் தேர்தலில், மக்கள் வரலாற்றில் நடந்த விடயங்களை நினைவில் வைத்து, அவற்றிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, புத்திசாலித்தனமான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும். தேர்தல் ஒன்று வரும்போது எப்போதும் ஏதாவது பூச்சாண்டி காட்டுவதை நாங்கள் காண்கின்றோம். அது தேசிய அரசியல் குறுகிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக இருக்கும். சில சந்தர்ப்பங்களில் அது சர்வதேச அரசியலில் குறுகிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அமைந்திருக்கும் - என்றார். (எ-இ)

## சுதந்திரக் கட்சியுடன் ஆளும் கட்சி கூட்டணி

யாழ்ப்பாணம், மே 26

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைக்க, ஆளும் கட்சி அதிருப்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணி முயற்சித்து வருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

எம்மிடம் 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். நாடாளுமன்றத்தில் 14 சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். எமது நிலைப்பாட்டை நாம் விரைவில் அறிவிப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-25-6)



## நூல் வெளியீடு

மருத்துவரும் நூலாசிரியருமான தியாகராஜா சுதர்மனின், 'நீரிழிவு முகாமையில் உணவு, உள்ளம், உடற்பயிற்சி' எனும் தலைப்பிலான நூல், சுன்னாகத்தில் அமைந்துள்ள யாழ்.சித்த மருத்துவமனை வளாகத்தில் மருத்துவர் ஜெகதீஸ்வரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்டது.

நிகழ்வில் மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆணையாளர் மருத்துவர் திருமதி கனகேஸ்வரி ஜெபநாமகணேசன், கைதடி சித்த போதனா மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் சியாமலா துரைரட்ணம், சித்த மருத்துவர்கள், தெல்லிப்பழைப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பராநந்தகுமார், நூலாசிரியர்கள், நலன் விரும்பிகள், சித்த மருத்துவ மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-125)

## நாய்கள் கணக்கெடுப்பு

ஜூன், ஜூலை மாதங்களில் நாடளாவிய ரீதியில் நாய்களைக் கணக்கெடுக்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

விசர்நாய் கடியிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. தற்போது இலங்கையில் 3 இலட்சம் நாய்கள் உள்ளன. அவற்றைக் கொல்வதற்குச் சட்டத்தில் இடமில்லை. எனவே நாய்களின் ஆரோக்கியத்தை பேணவும், அவற்றுக்கு கருத்தடை சிகிச்சை செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-25-6)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 26

'திருக்குறளும் சுக நலமும்' புத்தக வெளியீட்டு விழா கோப்பாய் ஆசிரியக் கலாசாலை அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில், யாழ்.இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் கேட்போர் கூடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் எஸ். திருவாகரனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ.கேதீஸ்வரன், யாழ்.மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர் மருத்துவர் ரி.பேரானந்தராஜா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுகன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் கலாநிதி என்.சண்முகலிங்கன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-25)



## யாத்திரை நூல் வெளியீடு

வவுனியா, மே 26

வவுனியாவைச் சேர்ந்த ஊடகவியலாளர் நவரத்தினம் கபிலநாத் எழுதிய 'யாத்திரை' எனும் நூல், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது.

நிகழ்வில் விருந்தினர்களாக மனித உரிமை செயற்பாட்டாளரும் தைரியமிக்க பெண்களுக்கான அமெரிக்க அரசாங்கத்தின் விருது பெற்றவருமான சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராசா, வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.மங்களேஸ்வரன், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கனும் ஆய்வாளரும் மூத்த ஊடகவியலாளருமான தமிழ்நிதி அருணா செல்லத்துரை, சிரேஷ்ட ஊடகவியலாளர் அ. நிக்சன், தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத் தலைவர் வி.எஸ் சிவகரன் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-110)



## சிறப்பு ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், மே 26

பண்பாட்டுப் பன்மைத்துவத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்த சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

ஆரம்பக் கல்விப் பயிற்சிநெறி ஆசிரிய மாணவி ஜெயந்தகுமார் சுலோசனாதேவி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறை முதுநிலை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-66)

## வங்காலை கிராமத்துக்குள் கடல் நீர் உட்புகும் அபாயம்

மன்னார், மே 26

மன்னார் மாவட்டத்தில் தென்கடலுக்கு அருகிலுள்ள வங்காலை கிராமத்துக்குள் கடல்நீர் உட்புகுந்து வரும் அபாயம் தோன்றியுள்ளது. தங்கள் படகுகளையும், கடலோரத்தில் அமைக்கப்பட்டுள்ள மீன் வாடிகளிலுள்ள கடல் உபகரணங்களையும் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தும் நடவடிக்கைகளில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை, நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாகவே, மன்னாரிலும் கடல் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இதனால் கடற்றொழிலாளர்களின் முக்கியமான பிரதான பாதையை மேவி கிராமம் நோக்கி கடல்நீர் பரவத்தொடங்கியுள்ளது. கடல்நீர் கிராமத்துக்குள் உட்புகாது இருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அந்தப்பகுதி மக்கள் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். (ப-60)



## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 26

புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம், பாடசாலை பொது மண்டபத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அனைத்துப் பெற்றோர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தத் தேர்தலையும் ஐ.ம.சக்தி சந்திக்கும்



## வசந்த யாப்பா பண்டார தெரிவிப்பு

கொழும்பு, மே 26

எந்தவொரு தேர்தல் நடத்தப்பட்டாலும் வெற்றிபெற வேண்டும் என்ற உறுதியும் திட்டமும் ஐக்கிய மக்கள் கூட்டணியிடம் உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் அதற்காக பாடுபடுவோம். சஜித் பிரேமதாஸ தலைமையில் அரசாங்கத்தை அமைப்பதற்காகச் செயற்பட்டு வருகின்றோம். நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படுமாயின் பொதுத் தேர்தலில் அதிகபடியான ஆசனங்களுடன் நாடாளுமன்ற அதிகாரத்தைப் பெற்று அடுத்த அரசாங்கத்தை அமைப்பதற்குப் பாடுபடுவோம் - என்றார். (ஏ-இ)

# இலங்கை விவகாரங்கள்; கண்காணிப்பு அவசியம்

## அமெரிக்க ஆணைக்குழு பைடன் அரசுக்கு வலியுறுத்து

**கொழும்பு, மே 26**

**இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிராகத் தூண்டப்படுகின்ற அமைதியின்மை மற்றும் வன்முறைகளைத் தடுப்பதற்கு இலங்கையை கண்காணிப்புப் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று ஜோ பைடன் தலைமையிலான அரசாங்கத்துக்கு சர்வதேச மதச் சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.**

இலங்கையின் நிலைவரம் குறித்து அமெரிக்க அரசாங்கம் முன்னெடுக்கவேண்டிய விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

சிறுபான்மையினருக்கு எதிராக பௌத்த பிக்குகளால் தூண்டப்பட்ட ஒடுக்குமுறைகளைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருக்கிறது.

இலங்கை அரசாங்கம் மத சிறுபான்மையினரைத் தொடர்ச்சியாக ஒடுக்கியும், அச்சுறுத்தியும் வருவதுடன் அவர்களது வழிபாட்டுத்தலங்களுக்குள் பிரவேசிப்பதற்கும் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு முழுவதும் பயங்கரவாதத் தடைச்சட்டம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச் சட்டம் ஆகியவற்றின்கீழ் நபர்களைப் பலவந்தமாகத் தடுத்து வைத்ததன் ஊடாக இலங்கை அரசாங்கம் மதச்சுதந்திரத்தை வெகுவாக மட்டுப்படுத்தியது.

அதேவேளை - கடந்த ஆண்டு முழுவதும் தொல்பொருள் திணைக்களமானது பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதற்காக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை ஆக்கிரமித்துள்ளது.

அந்தவகையில் மதச்சுதந்திரத்துடன் தொடர்புடைய விவகாரத்தில் இலங்கையைவிசேட கண்காணிப்புப் பட்டியலில் சேர்த்தல், பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்குமாறு அல்லது சர்வதேச நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும். இலங்கையில் மதச் சுதந்திரம், கருத்துக்கோரல் உள்ளிட்டவற்றை உறுதிசெய்ய வேண்டும்- என்றுள்ளது. (ச-இ)

# சீரற்ற காலநிலையால் இதுவரை 7 பேர் மரணம்

கொழும்பு, மே 26

நாட்டில் நிலவும் காற்றுடன் கூடிய கடும் மழை காலநிலை காரணமாக ஏற்பட்ட இடர் நிலைமையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7 ஆக அதிகரித்துள்ளது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இவற்றுள் 6 மரணங்கள் மரங்கள் முறிந்து விழுந்ததால் ஏற்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம்வரை திரட்டப்பட்ட தரவுகளின்படி 18 மாவட்டங்களின் 171 பிரதேச செயலகப் பிரிவுகளில் 11 ஆயிரத்து 610 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 799 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் 11 பேர் காயமடைந்துள்ளனர் என்றும், 10 வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது. (ஏ-இ)

# நாட்டைவிட்டு வெளியேறிய 7 லட்சம் பேர்

கொழும்பு, மே 26

கடந்த இரண்டு வருடங்களில் சுமார் ஏழு இலட்சம் இலங்கையர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமையே இதற்கு முக்கியமான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தரவுகளின்படி, 2022 ஜனவரி முதல் 2024 மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில், குறைந்தபட்சம் 6 இலட்சத்து 83 ஆயிரத்து 118 இலங்கையர்கள் சட்ட ரீதியில் வெளிநாட்டு வேலைக்காக நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். (ஏ-இ)

# கருத்துச் சுதந்திரத்தில் இலங்கை முன்னேற்றம்

கொழும்பு, மே 26

கருத்துச் சுதந்திரத்தில் முன்னேற்றம் கண்டுள்ள ஐந்து நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம்பிடித்துள்ளது. 2024 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய வெளிப்பாடு அறிக்கை (GER) இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

பிரேசில், தாய்லாந்து, நைஜர் மற்றும் பிஜி ஆகிய நாடுகளுடன் இலங்கையும் அதிக வெளிப்படைத்தன்மையை நோக்கி நகர்கின்றது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக மக்கள்தொகையில் 50 வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் கருத்துச் சுதந்திர நெருக்கடியில் வாழ்கின்றனர் என்று 2024 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய வெளிப்பாடு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிக்கையானது கருத்துச் சுதந்திரத்தின் 25 குறிகாட்டிகளைப் பயன்படுத்தி, உலகளவில் சுதந்திரமான கருத்து மற்றும் தகவலுக்கான உரிமையின் பகுப்பாய்வை வெளிப்படுத்தியுள்ளது. உலகளாவிய ரீதியில் 195 நாடுகளில் 161 நாடுகளை உள்ளடக்கிய இந்த அறிக்கையில் இலங்கை 94 ஆவது இடத்தில் உள்ளது. (ஏ-இ)

# ரணிலிடம் அதிகாரம் ஐ.தே.க. வியூகமா?



கொழும்பு, மே 26

ஜனாதிபதிரணிலிடம்நிறைவேற்றதிகாரத்தைத் தொடர்ந்தும் தக்கவைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ள நிலையிலேயே, அடுத்த பதவிக் காலத்தில் ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரத்தை ஒழிக்காமல், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையைத் தக்கவைக்க வாக்கெடுப்பொன்றை நடத்துவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அரசமைப்பின் பிரகாரம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டு, நவம்பர் முதல் வாரத்துக்குள் அந்தத் தேர்தலில் வெற்றிபெறுபவர் பதவியேற்றிருக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-44)

# பெரமுனவின் வேட்பாளர் யார்? அடுத்தவாரம் கலந்துரையாடல்

கொழும்பு, மே 26

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் அடுத்தவாரம் கலந்துரையாடலொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில், தனது கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளின் கருத்தைக் கேட்டறிவதற்கு பெரமுன உத்தேசித்துள்ளது. இதன்படி அடுத்தவாரம் விசேட கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

தற்போது பெரமுன தலைமையிலான கூட்டணியுடன் இணைந்து செயற்படும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளர்களுக்கு இந்தக் கலந்துரையாடலுக்காக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தம்மிக்க பெரேராவைக் களமிறக்குவதா அல்லது ஜனாதிபதிரணிலை ஆதரிப்பதா என்பது தொடர்பில் பெரமுனவுக்குள் இருவேறு நிலைப்பாடுகள் தோன்றியுள்ள பின்னணியிலேயே இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-44)

# தொடரும் மின்தடை

கொழும்பு, மே 26

சீரற்ற காலநிலையால் இலங்கையில் 4 லட்சத்து 31 ஆயிரத்து 500 பேர் மின்தடை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை மின்சாரசபை பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

மின்தடை தொடர்பில் நாளாந்தம் அதிகளவான முறைப்பாடுகள் கிடைப்பதால், அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பதிலளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 4 நாள்களில் 59 ஆயிரத்து 400 மின்சார செயலிழப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19.11.1937

மறைவு 06.06.2023

## அமரர் குமாரவேலு விசயரத்தினம்

**Ratnam Pharmacy,**
**Ratnam Filling Station,**
**Ratnam Villa.**

வையகம் போற்ற வாழ்ந்து
வானுறையும் தெய்வமதாய்
இயற்கையில் இணைந்து
பழுதில்லாப் புதுமலராய் - என்றும்
எம் இதயங்களில் மணம் வீசும்
அன்பு நிறை அப்பாவே!
ஆண்டுகள் ஒன்று ஆனதே பிரிந்து...

உயர்குணமேவிய திருவுருவாய் வழிகாட்டி
நிலவொளியாய் குளிர்மை தந்து - தினம்
எமையெல்லாம் மனதாற்றி
அகவொளியாய் நிறைமதியாய்
குறைநிறைகள் எடுத்தியம்பி
நல்வழி காட்டிய உம் கருணையினை
பேறாகப் பெற்றோம் பெருமை கொண்டோம்

நீறாகிப் போனாலும் நீங்களே திசைகாட்டி
நித்திய வாழ்வினில் நீங்கா நிறையுரு
அணையாது ஒருபோதும்
நாம் கொண்ட பாசம்...
தேயாமல் வளருமிது தெய்வீக பாசம்!
இயற்கையின் அசைவுகளில் - உம்
உணர்வுகளை நுகர்ந்து
உம்பாதம் மலர் தூவி வணங்குகிறோம்!

குடும்பத்தினர்.
077 306 9506

144/1, நாசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர்...

யன் ரூபா செலவில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் நிர்மாணிக்கப்பட்ட சிறந்த மகளிர் சுகாதார நிலையம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று முற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

"இது 2017 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டாலும், கொரோனாத் தொற்று மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக மகளிர் சுகாதாரச் சேவைகளுக்கான இந்தச் சிறப்பு மையத்தின் பணிகளைப் பூர்த்தி செய்யமுடியவில்லை. ஆனால், இன்று அதை வெற்றிகரமாக பூர்த்தி செய்து பெண்களுக்கு வழங்கியதில் மகிழ்ச்சி அடைகிறேன். இன்று கிளிநொச்சி நகரில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மாங்குளம் பிரதேசத்தில் முதலீட்டு வலயத்தை உருவாக்கி இந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளோம்.

அத்துடன், இப்பிரதேசத்தில் வலுசக்தித் திட்டங்களை மீள உருவாக்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதுடன், கிளிநொச்சியில் இவ்வாறான செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கான அனுமதியும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசங்களில் உள்ள காணிப்பிரச்சினைகள் மற்றும் காணாமற்போனோர் பிரச்சினை தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். இன்று நிர்மாணிக்கப்பட்டுள்ள பெண்களின் சுகாதாரச் சேவைகளுக்கான சிறந்த நிலையத்தை இந்நாட்டுப் பெண்களுக்காகச் செய்யப்படும் ஒரு சிறந்த பணியாக அறிமுகப்படுத்தமுடியும். பெண்களுக்காக மேலும் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

நம் நாட்டில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்க எந்தச் சட்டமும் இருக்கவில்லை. அரசமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகள் மாத்திரமே இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. பெண்களுக்கான இரண்டு புதிய சட்ட வரைவுகளை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளோம்.

பெண்களை வலுவூட்டும் சட்டத்தின் கீழ், சட்டத்தின்மூலம் பெண்களை வலுவூட்டத் தேவையான நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும், அந்த நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த தனியான ஆணைக்குழு நியமிக்கப்படும். மேலும், இந்த ஜூன் மாத இறுதிக்குள் ஆண், பெண் சமூகத்தன்மை சட்ட வரைவை நிறைவேற்ற எதிர்பார்க்கிறோம். இந்த வரைவு தற்போது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். யாரும் அதற்கு எதிராக இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.

பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். அதற்கேற்ப பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிரான சட்டத்தை நடைமுறைப்படுத்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. பணியிடங்களில் பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் தொடர்பாக பெண்களுக்குச் சம உரிமை இருக்கவேண்டும். பெண்களின் உரிமைகள் சட்டப்பூர்வமாக்கப்படவேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம், அதற்கேற்ப அந்தச் சட்டத்தின் கீழ் நாங்கள் பணியாற்றமுடியும். மேலும், வீட்டில் இருக்கும் பெண்ணின் பாதுகாப்பையும் கவனிக்கவேண்டும். இந்தப் பெண்கள் உரிமை சட்ட வரைவுகள் ஏற்கனவே இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. அந்தச் சட்ட வரைவுகளை அனைவரும் படித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பெண்களின் உரிமைகள் குறித்து அவர்களுக்குக் கற்பிப்பதற்கான விசேட வேலைத்திட்டத்தையும் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கின்றோம்" என்று இந்த நிகழ்வில் ரணில் உரையாற்றினார். (அ-ஒ-26-27)

## உரத்தை...

கும் வழங்கும் 'உறுமய' வேலைத்திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட நிகழ்ச்சி நேற்று முற்பகல் இரணைமடு நெலும் பியச மண்டபத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் 4 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கிய ஆயிரத்து 700 முழு உரிமையுடைய காணி உறுதிப்பத்திரங்கள் இங்கு வழங்கப்பட்டதுடன், அடையாள ரீதியாக சில உறுதிப் பத்திரங்கள் ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டன.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கிளிநொச்சி நகரம் துரிதமாக வளர்ந்து வருகிறது. இந்த உறுதிகளை வழங்க முன்னர் மாகாண ஆளுநர்களின் அனுமதியைப் பெற்றுக்கொண்டோம்.

வெள்ளையர்கள் உருவாக்கிய சட்டத்தின் அடிப்படையில் இந்தக் காணிகள் வழங்கப்படுகின்றன. வெள்ளையர்கள் இந்தக் காணிகளைப் பாதுகாத்தனர். நீங்களும் இந்தக் காணிகளைப் பாதுக்க வேண்டும். இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு நாடாளுமன்றக் குழுவுக்கும் பணிப்புரை விடுக்கவுள்ளேன். உண்மையில் இந்தக் காணி உரிமைகள் மக்களுக்கு கிடைக்கவேண்டும்.

எமது விவசாயிகள் அரிசியில் தன்னிறைவு அடைந்த நாட்டை உருவாக்கியுள்ளார்கள்.

2003 ஆம் ஆண்டு நான் பிரதமராக இருந்தபோது அரிசியில் தன்னிறைவு அடைந்தோம். அதற்கு முன்னர் இந்த நிலைமை இருக்கவில்லை. அப்போது வன்னிப் பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர் உரம் அனுப்புவது குறித்து ஆராய்ந்தோம். உரத்தைப் பயன்படுத்தி புலிகள் ஆயுதங்களைத் தயாரிக்கக் கூடும் என்ற அச்சம் இருந்தது. இதுகுறித்து உயர் இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடினோம்.

போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் வன்னிப் பிரதேசத்துக்கு உரத்தை வழங்கினோம். 2003 ஆம் ஆண்டு அரிசி உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு பெற்றது. அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்ததில் வன்னி, அநுராதபுரம், பொலன்நறுவ மாவட்டங்களுக்கு பெரும்பங்கு இருக்கிறது.

தற்போது சிலருக்குக் காணி உரிமை கிடைத்துள்ளது. விவசாயக் காணி உரிமை கிடைக்கிறது. நவீன விவசாயத்தை அறிமுகப்படுத்தவுள்ளோம். இதனைப் பயன்படுத்தி, போட்டித்தன்மை மிக்க விவசாயத்துறையை ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறேன். இதன்மூலம் விவசாயத்துறை வளர்ச்சி பெறும். உலக சனத்தொகையும் அதிகரித்து வருகிறது. இதன்மூலம் அதிகரித்து வரும் சனத்தொகைக்கு எங்களுக்கு உணவளிக்க முடியும். தற்போது நாம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்தில் வன்னிக்கு மிகப்பெரிய வகிபாகம் இருக்கிறது.

உங்களின் காணிகளை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். போரால் காணிகளை இழந்தவர்கள் பெரும்பாலானோர் இருக்கின்றனர். தற்போது கிடைக்கும் காணிகளை இழந்துவிடக்கூடாது. நீங்கள் இந்தக் காணிகளில் விவசாயம் செய்து. வீடுகளைக் கட்டி அவற்றை உங்களுக்குப் பின்னர் உங்கள் பிள்ளைகளுக்கு வழங்குங்கள். இந்தப் பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. இதனை நீங்கள் செய்யவேண்டும் - என்றார். (அ-ஒ-26-113)

## ரணிலுக்கு...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சியில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த எதிர்ப்புப் போராட்டத்துக்கு நீதிமன்றத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பில் க.கோகிலவாணி இது தொடர்பில் ஊடக சந்திப்பில் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வந்துள்ளார். அவரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டிருந்தோம். அதற்கு நீதிமன்றம் தடை உத்தரவு விதித்துள்ளது.

எமது பிள்ளைகளைப் போர்க்காலத்தில் இராணுவத்திடம் கையால் ஒப்படைத்தும் விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டு இன்றுவரையில் எமக்கான நீதி கிடைக்கப்பெறவில்லை. எத்தனையோ போராட்டங்கள் வாயிலாக ஊடகங்கள் வாயிலாகத் தெரிவித்தும் இதுவரையில் எமக்கான நீதி கிடைக்கவில்லை.

போர்க்காலங்களில் உண்ண உணவின்றி உப்புக் கஞ்சி குடித்து உயிரைக் காத்துக்கொண்டோம். அதனைச் சர்வதேசத்துக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் எடுத்துக்காட்டும் முகமாக மே 18 முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வந்தது.

நினைவுக் கஞ்சிகளை இராணுவம் மற்றும் பொலிஸார் காலால்தட்டி சுகாதாரக் கேடு எனப் பலரைக் கைது செய்துமுள்ளனர். ஆனால், இன்று நாடு முழுவதும் வெசாக் பெருநாளை கொண்டாடி வருகின்றனர். இதுவரையில் எந்தக் குழப்பங்களும் இல்லாமல் நடத்துகின்றனர். அப்படி என்றால் தமிழருக்கு ஒரு சட்டம் சிங்களவர்களுக்கு ஒரு சட்டமா எனக் கேள்விகள் எழுந்துள்ளன, இதற்காகவே ஜனாதிபதியின் வருகையை எதிர்க்கத் திட்டமிட்டிருந்தோம் - என்றார். (அ-ஒ-113)

## மாகாணத்துக்கு...

சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்டகாலமாக காணி உரிமை இல்லாமல் இருந்த மக்களுக்கு அந்தக் காணி உரிமைகளை மக்களுக்கே வழங்கப்படுகிறது. இந்தப் பணிகளை முன்னெடுத்த ஜனாதிபதிக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் எமது மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்தக் காணி உரிமை உங்களுக்குக் கொடுக்கும்போது எவ்வித கட்டுப்பாடுகள் இன்றி, உங்களுக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்படுகிறது. இதுவரை இவ்வாறு நிகழவில்லை. இதில் ஓர் ஆபத்தும் இருக்கிறது. இந்தக் காணிக்கான முழு அதிகாரம் உங்களுக்குக் கிடைக்கும்போது, அதனை ஈடுவைத்து அதனை இழக்க நேரிடலாம். அதனை நீங்கள் விற்கக்கூடும். பல்தேசிய கம்பனிகள் வந்து இந்தக் காணிகளை வாங்கக்கூடும்.

நாட்டுப்பற்றுள்ள, மண்பற்றுள்ள நீங்கள், உங்கள் காணிகளைப் பாதுகாத்துக் கொள்வதில் அவதானமாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம். இந்தக் காணி உரிமையைப் போன்று அதிகாரப் பகிர்வு குறித்தும் குறிப்பிடவேண்டும். அதிகாரப் பகிர்வு என்று கோரிக்கை நீண்டகாலமாக மக்களின் அரசியல் அபிலாஷையாக இருக்கிறது. 1987ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அரசமைப்புத் திருத்தத்தில் காணி, பொலிஸ் அதிகாரம் மாகாணசபைக்கு கொடுக்கப்பட்டது. அரசமைப்பில் இருந்தும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

காணி அதிகாரம் முழுமையாக மாகாண சபைகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அரச காணிகளைக் கொடுக்கும்போதும் மாகாணசபைகளில் இருந்து வரும் கோரிக்கைகளுக்கு அமையவே வழங்கப்படவேண்டும் என்று உயர் நீதிமன்றத் தீர்ப்பொன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், பின்னர் நீதிமன்றத்தின் மற்றுமொரு தீர்ப்பில், கொடுக்கப்பட்ட அதிகாரம் பறித்தெடுக்கப்பட்டு மத்திய அரசாங்கத்திடம் கொடுக்கப்பட்டது - என்றார். (அ-ஒ-5)

## பேசாலையில்...

22 ஆம் திகதி புதன்கிழமை இரவு ஒன்பது மணியளவில் நடைபெற்றுள்ளது வாள்வெட்டுச் சம்பவத்தில் காயமடைந்தவர் 38 வயதுடையவர் என்றும், அவர் மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்கானவரின் குடும்பத்தினர் மறுநாள் பேசாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இதுவரை எவரும் சந்தேகத்தில் கைதாகவில்லை.

இதேவேளை - அன்றையதினம், வாள், கத்தி, இரும்புக்கம்பிகளுடன் 15 க்கும் மேற்பட்டவர்கள் அங்கு தாக்குதல் நடத்த வந்திருந்தனர் என்று கூறப்படுகின்றது. (அ-ஒ-213)

## மீன்பிடி...

இடம்பெற்றது. வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போது வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் 10 கோரிக்கைகள் அடங்கிய மனுவும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

வடமாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய நான்கு மாவட்ட மீனவப் பிரதிநிதிகளும் தமது மாவட்டம் சார்ந்த பிரச்சினைகளை முன்வைத்தனர். தொடர்சியாகத் தமது பிரச்சினைகளை வடக்கு மாகாணக் கடற்றொழிலாளர்கள் சார்பில் நாடாளுமன்றில் பேசவேண்டும் என்ற கோரிக்கையும் மீனவப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டதுடன்,

எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர். (அ-ஒ-100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## பி.பி.எல். கிரிக்கெட் தொடர்

# கிண்ணத்தைக் கைப்பற்றியது 2014 ஆம் ஆண்டு அணி

யாழ்ப்பாணம், மே 26
வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்ட பி.பி.எல். கிரிக்கெட் தொடரில் 2014 ஆம் ஆண்டு அணி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.
இந்தப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் கடந்த 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் நடைபெற்றன. இதில் பாடசாலை சார்பாகவும் ஓர் அணி பங்குபற்றியதுடன், பழைய மாணவர்களின் 20 அணிகள் பங்குபற்றின. 2010 மற்றும் 2014 ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு அணிகளுக்கு இடையேயான இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பெரும் எதிர்பார்ப்புடன் நடைபெற்றது.
இதில் 2014 ஆம் ஆண்டு அணி 2010 ஆம் ஆண்டு அணியை வீழ்த்தி வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது. இந்தப் போட்டியில் 2014 ஆண்டு அணியைச் சேர்ந்த ரி.சரவணன் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும், 2010 அணியைச் சேர்ந்த எஸ். துசியந்தன் சிறந்த பந்து வீச்சாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.
கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத் தலைவரும், கல்லூரியின் பழைய மாணவனுமான ப.தர்மகுமாரன் பிரதம அதிதியாக பங்குபற்றியதுடன், கல்லூரி அதிபர் லங்கா பிரதீபன், பழைய மாணவர் சங்கத்தினர், போட்டியாளர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-27)

# போதைப்பொருள்களால் நெருக்கடியில் பெற்றோர்

## ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன் சுட்டிக்காட்டு

கொடிகாமம், மே 26
தற்போது போதைப்பொருள் பாவனை பெரும் பிரச்சினையாக உள்ளது. பிள்ளைகளை எவ்வாறு வளர்ப்பது என்ற அச்சம் பெற்றோரின் மத்தியில் உள்ளது. பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பாக பெற்றோர் பெரும் அச்சத்தில் உள்ளனர்.
இவ்வாறு தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன் தெரிவித்தார்.
"இன்டலெஜன்ட் அபாகஸ் எடியூகேசன்"(IAE) நிலையத்தின் யாழ். மாவட்ட சாவகச்சேரி கிளையினரால், தேசிய மட்டப் போட்டியில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
தற்காலத்தில் சிறுபிள்ளைகள் தொலைபேசிப் பாவனைக்கு அடிமையாகிறார்கள். அதனால் உடல், உள சார்ந்த பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறார்கள். நல்ல உடல் ஆரோக்கியமுடையவர்களாக சிறுவர்களை வளர்க்க வேண்டும். நாங்கள் அறிவை வளர்க்க எவ்வாறு கஷ்டப்படுகின்றோமோ அதேபோல ஆரோக்கியத்தை வளர்க்கவும் தவறக்கூடாது.
அண்மையில் நடந்த ஆய்வின்படி, தமிழ் பிள்ளைகளின் உடல் வளர்ச்சியிலே இரும்புச் சத்து குறைபாடு இருப்பதாக உலக வங்கி குறிப்பிட்டுள்ளது. இரும்புச்சத்து குறைபாட்டில் கவனம் எடுத்தால் நிச்சயமாக உங்கள் பிள்ளைகள் போட்டிகள் மற்றும் பரீட்சைகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று வெற்றி வாகை சூடுவார்கள் - என்றார். (எ-25-159)



'சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம்' பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவ நெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சொற்பொழிவுத் தொடர் 6 நவாலி தெற்கு ஸ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (எ-25-159)

# மாவட்டச் செயலகத்தில் வெசாக் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 26
யாழ்.மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில், யாழ். மாவட்டச் செயலக மண்டபத்தில் மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் வெசாக் பௌர்ணமி தின நிகழ்வு, கடந்த வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.
நிகழ்வில் யாழ்.நாகவிகாராதிபதி சிறி விமலதேரர், யாழ்.மாவட்டப் பதில் செயலர், மேலதிக செயலர் க.ஸ்ரீமோகன், யாழ்.பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க, யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க, விமானப்படைக் கட்டளைத் தளபதி எச்.எம்.சி.ஹேரத், வடமாகாணக் கடற்படை உயரதிகாரி ரோஹித அபேசிங்கே எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-66)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். பண உதவி கிடைக்கும். வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பணவரவு இருந்தாலும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. மனவருத்தம் ஏற்படக்கூடும். வீண் செலவுகள் ஏற்படும். மகாவிஷ்ணுவை வழிபட சிரமங்கள் குறையும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். வீண்அலைச்சலுடன் உடல் அசதியும் ஏற்படக் கூடும். சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். கனிவான அணுகுமுறை அவசியம்.

**கடகம்:** மனதில் சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். பணம் கிடைப்பது தாமதமாகும். சிரமங்கள் ஏற்படும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மகா விஷ்ணுவை வழிபடுவது நன்று. தடைகள் விலகி நன்மைகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். வீண் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். அதிகாரிகளிடம் பேசும்போது பதற்றம் தவிர்ப்பது அவசியம். வியாபாரத்தில் விற்பனை சுமாராக இருக்கும்.

**கன்னி:** தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நீண்ட நாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைக்கும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம் . காரியம் சாதகமாக முடியும்.

**துலாம்:** திடீச்செலவுகள் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விடயத்தில் கவனம் தேவை. மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம் :** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். மனஸ்தாபம் நீங்கும்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வெளியில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சற்று அலைச்சல் ஏற்படும். சிலருக்கு எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனவருத்தங்கள் நீங்கும்.

**மீனம்:** மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ரணில் - மண்டேலா - போந்தா!


உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு இலங்கையில் அமைக்கப்படுவதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது என்று யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுமுன்தினம் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அந்த ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் நீதிப் பிடிமானங்கள் என்பன தொடர்பில் தற்போது அவதானம் செலுத்தப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி இயம்பியிருக்கின்றார்.

இலங்கை அரசாங்கத்தால், அமைக்கப்படவுள்ள உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவை பிரச்சினைகளுக்கான தீர்வாக மட்டுமல்ல, மாறாக அந்தத் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாக ஏற்கக்கூட தமிழர்கள் தயாரில்லை. ஆதலால், இந்த ஆணைக்குழுவுக்கு தொடர்ச்சியான எதிர்ப்புகளே தமிழர் தாயகத்தில் வெளிப்படுத்தப்படும் நிலையில், 'ஆணைக் குழு வரத்தான் போகின்றது தீர்வைத் தரத்தான் போகின்றது' என்றிருக்கின்றார் ரணில்.

உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் பிறப்பிடம் தென்னாபிரிக்கத் தேசம்தான். முன்னொரு காலத்தில் வெள்ளையின மேலாதிக்கத்தில் ஊறித்திளைத்த நாடாக தென்னாபிரிக்கா இருந்தது. இதனால் கறுப்பின மக்கள் சொல்லொணாத் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்தனர். அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. நிலங்கள் பறிக்கப்பட்டன. சொத்துகள் சூறையாடப்பட்டன. 'கறுப்பினத்தவர்களின் நரகம்' என்று தென்னாபிரிக்கா வர்ணிக்கப்படும் அளவுக்கு அங்கு கறுப்பினத்தவர்களுக்கு எதிரான நிறவெறியும் இனத்துவேசங்களும் நிரம்பியிருந்தன. அத்தனையில் இருந்தும் தென்னாபிரிக்கா இன்று மீண்டுவிட்டது. உலகில் எங்கெல்லாம் அடக்குமுறையும் இனவழிப்பும் நடைபெறுகின்றதோ அதற்கெதிராக துணிந்து விரல்நீட்டக்கூடிய வகையில் தென்னாபிரிக்கா தன்னைப் புடமிட்டிருக்கின்றது. இப்போதும்கூட இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் காரணகர்த்தா தென்னாபிரிக்காவே. ஆனால், அந்த மீட்சி பகட்டான நடவடிக்கையாகவோ -வெறும் வாய்ச்சொல்லாடல்களை மையப்படுத்தியதாகவோ அல்லது ஆணைக்குழுக்களைநிறுவியதால்மட்டும்கிட்டியதாகவோ இருக்கவில்லை. உலகின் ஆகச்சிறந்த பொறிமுறைகளைக் கைக்கொண்டே தென்னாபிரிக்கா இனத்துவேசத்திலிருந்து விடுபட்டது. 'விடுபட்டது' என்பதை விட 'புதிதாக மீண்டும் கட்டமைக்கப்பட்டது' என்பதே இங்கு பொருத்தம்.

நிறவெறித் தலைவரான போந்தா போன்றவர்களின் பிடியிலிருந்து தென்னாபிரிக்கா விடுபடுவதற்கு அக்காலத்தில் முக்கியமான காரணமாக இருந்தவர் மண்டேலா என்ற பெரும் தலைவர். மண்டேலாவின் முயற்சிகளால் தென்னாபிரிக்கக் குடியரசு 'ஓர் உண்மைக்குடியரசாக' உருவாக்கப்பட்ட பின்னர், அவர் அதுவரைகாலமும் இருந்துவந்த மனக்கசப்புகளையும் ஆறாது என்று கருதப்பட்ட ரணங்களையும் ஆற்றுப்படுத்துவதையே தனது தலையாய கடமையாகக் கொண்டிருந்தார். இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை கட்டமைக்கப்படாமலும் பகைமை மறக்கப்படாமலும் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையும் பயனற்றது. இதனால்தான் முதலில் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை உருவாக்குவது மண்டேலாவின் எண்ணமாக இருந்தது. இதற்காக, அடக்குமுறையாளர்களுக்கும், அடக்கப்பட்டவர்களுக்கும் இடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் பல்வேறு செயற்பாடுகளில் மண்டேலா ஈடுபட்டார். அவற்றில் முக்கியமானது 'உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவை' அமைத்து - பழிவாங்கலைத் தவிர்த்து - உண்மையையும் நியாயத்தையும் பெறுவதற்கான ஒரு முறைமையை அதனூடாக ஏற்படுத்தினார்.

உலக வரலாற்றில், உண்மைகளை அறிந்து - மன்னித்து -இணக்கமாக வாழ்வதற்கான ஒரு சிறந்த முன்மாதிரியாக இந்த முறைமை இன்றளவும் கருதப்படுகிறது. இலங்கை தற்போது ஆரம்பித்திருக்கின்ற 'உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு' என்ற 'சொல்லாடலின்' பின்புலமும் இதுதான். ஆனால், தென்னாபிரிக்கா கைக்கொண்ட சொல்லாடல்களை பிரதிசெய்வதால் நல்லிணக்கம் இம்மியும் சாத்தியப்படாது என்ற யதார்த்தத்தை இலங்கையின் ஆட்சியாளர்கள் குறிப்பாக ஜனாதிபதி ரணில் போன்றவர்கள் தெளிந்திருந்தல் அவசியம். அந்தத் தெளிவு 'மருந்திடலாக' இங்கு மாற்றம்பெற வேண்டும். இலங்கை செய்யமறுக்கும் கருமமும் இதுவே.



# கைபேசிக்கு அடிமையாதல் வன்முறைக்கு வித்திடும்!

## மருத்துவர்கள் எச்சரிக்கை

**கொழும்பு, மே 26**

**கைபேசிகளுக்கு அடிமையாகும் சிறுவர்கள் வன்முறையில் ஈடுபடும் வகையில் நடந்து கொள்கின்றனர் என்றும் பெற்றோரால் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளதாக மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.**

இலங்கையில் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 60 சதவீதம் பேர் கையடக்க தொலைபேசிகளுக்கு அடிமையாகி உள்ளனர். இதில் பல சிறுவர்கள் இரவு நேரத்தில் தூக்கமின்றி எப்போதும் கவலையுடன் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. சிறுவர்கள் தங்கள் கல்வி நடவடிக்கையை சரியான முறையில் முன்னெடுப்பதில்லை என்பது ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.
அத்துடன் அவர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவர்களின் உடல் சரியாக செயற்படாததால் நீரிழிவு நோய் ஏற்படுவதாகத் தெரியவந்துள்ளது.
எனவே சிறுவர்களின் கைபேசிப் பாவனை தொடர்பில் பெற்றோர் அவதானத்துடன் செயற்படவேண்டும் என் றும் மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

# மனித உரிமை கற்கைக்கு ஜப்பான் புலமைப்பரிசில்

கொழும்பு, மே 26

மனித உரிமைகள் தொடர்பாக பட்டமேற்படிப்பு, கலாநிதிப்பட்டம் போன்ற கற்கைகளை மேற்கொள்வதற்கு புலமைப்பரிசில்களை வழங்க ஜப்பானிய அரசு முன்வந்துள்ளது.
பொதுநிர்வாகத்துறையிலுள்ள நிறைவேற்று தர அதிகாரிகள் இந்த புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது 4 ஆவது அணி பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறது. 4 ஆவது அணியின் பயிற்சி 2025 இல் முடிவடையும். (ப-6)

# ஜப்பானில் இலங்கையர் கைது!

கொழும்பு, மே 26

ஜப்பானில் சட்டவிரோத கருக்கலைப்புச் செய்த குற்றச்சாட்டில் 2 இலங்கை மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.
கருக்கலைப்புச் செய்த குற்றச்சாட்டில் இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவரும் அவரது காதலனுமே கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் கருக்கலைப்புக்கு உதவிய குற்றச்சாட்டில் மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் அந்த நாட்டுப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (எ)

# தேயிலை திருவிழா

கொழும்பு, மே 26

இருநூறு ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றை மரபுரிமையாகக் கொண்ட தேயிலைத் தொழில்துறைக்கு பங்களிக்கும் அனைத்து தரப்பினரையும் நினைவுகூர்ந்துவருடாந்த தேயிலைத் திருவிழா நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டுள்ளது. (எ-இ)

# பெண் சிப்பாய்களுக்கு தாதியப் பட்டமளிப்பு

யாழ்ப்பாணம், மே 26

முப்படைகளையும் சேர்ந்த தாதிய பயிற்சி பெற்ற பெண் சிப்பாய்கள் 45 பேருக்குமான பட்டமளிப்பு விழா இலங்கை கடற்படை தாதிப் பயிற்சி நிலையத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.
7 இராணுவப்படை, 35 கடற்படை, 3 விமானப்படைகளைச் சேர்ந்த பெண் சிப்பாய்களே தாதியப் பயிற்சி பெற்றுள்ளனர். (25-6)

## நாளை

27.05.2024

**திங்கட்கிழமை**

**வைகாசி - 14**

சுபநேரம் : 11.52 - 01.22

ராகுகாலம் : 07.22 - 08.52

## நாளொரு நல்வார்த்தை

**“மகிழ்ச்சிக்கு வெற்றி முக்கியம் அல்ல. வெற்றிக்கு மகிழ்ச்சி முக்கியம்.”**

**- ஆல்பேர்ட் ஸ்வைட்ஸர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## JAFFNA DISTRICT CRICKET ASSOCIATION.

# VACANCIES

We are looking for an **ADMINSTRATIVE MANAGER** and an **ACCOUNTANT** to help with JAFFNA DISTRICT CRICKET ASSOCIATION.

1. **ADMINISTRATIVE MANAGER**

**Job Responsibilities**

- Maintenance of communication, documentation, public relations of the Association.
- Maintenance of record for correspondence.
- Resolves office-related requests and responses.
- Data entry using MS Word & Excel.
- Overall supervising in office maintenance.

**Qualifications & Experience**

- Bachelor's degree in Management or 3 pass GCE (A/L).
- Minimum 2 years' experience of relative work.
- Communication skill in both English & Sinhala languages will be an additional qualification.
- Proficiency in MS office & Graphics software.

2. **ACCOUNTANT**

**Job Responsibilities**

- Overseeing and managing all payment transactions.
- Recording and reconciling payment transactions in the General Ledger system.
- Maintaining accounts to ensure all payments are up to date and dispersing are resolved.
- Assisting in the preparation of financial statements and management reports.
- Staying updated with financial regulations and compliance requirements.

**Qualifications & Experience**

- Bachelor's degree in accountancy or HNDA or 3 pass GCE (A/L) Commerce stream.
- Minimum 3 years' experience of accounting field.
- Proficiency in unitizing accounting software and MS Excel for data entry.
- Excellent communication skills for effective collaboration within teams.
- Communication skill in both English & Sinhala languages will be an additional qualification.

**Salary:** If you are a team player with the drive and initiative to perform with minimum supervision and willingness to work in a team-oriented environment, you could be the person we are looking for; An attractive remuneration package & EPF, ETF will be offered to the selected candidates.

Please register post your detailed CV together with names and contact numbers of two non-related referees within 10 days of this advertisement to,

**Jaffna District Cricket Association**
**No: 84, Ramalingam Road,**
**Thirunelveli, Jaffna.**


# குழந்தைகள் போஷாக்கு: கணக்கெடுப்பு ஆரம்பம்

கொழும்பு, மே 26

நாடளாவிய ரீதியிலுள்ள குழந்தைகளின் போஷாக்கு அளவுகள் தொடர்பாகக் கணக்கெடுப்பை நடத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் ஆறு முதல் 18 வயது வரையிலான சிறுவர்களின் ஊட்டச்சத்து அளவு தனித்தனியாக அளவிடப்படவுள்ளது. குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுமென குடும்ப சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது. (ச-இ)


ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமக

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் கருணாகரன் (கரன்)



தோற்றம் 31.10.1969 — இறப்பு 25.05.2024

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கருணாகரன் நேற்று (25.05.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பரிமளம் தம்பதியரின் இளைய மகனும், காலஞ் சென்றவர்களான செல்லத்துரை- திலகவதி தம்பதியரின் மருமகனும் வத்சலாவின் பாசமிகு கணவரும் (ஆசிரியை புனித பத்திரிசியார் கல்லூரி), அமரர்களான சாந்தம்மா, கமலாதேவி, தங்கமணி, தங்கமலர் மற்றும் கருணாநிதி, மங்கையர்க்கரசி, பரமேஸ்வரி, மகேஸ்வரி, உமாதேவி, சிறிதரன், புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர்களான வேலாயுதம், இராமலிங்கம், கமலநாதன், குணசிங்கம், யோகராசா, சிவமலர், மகேஸ்வரன் மற்றும் சுப்பிரமணியம், நவரட்ணம், அகிலேஸ்வரி சுந்தரலிங்கம், வசந்தலீலா, லோகநாதன், வதனி, வனிதா, விஜயரத்தினம், ஜேந்திரன், சுவீந்திரன், தாரணி, சித்திரா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 583) V-1



## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 05 . 1950 — மறைவு 23 . 05 . 2024



### வெள்ளையன் சுப்பிரமணியம்

(ஓய்வு நிலை எழுதுவினைஞர்,
பனை தென்னை வள அபிவிருத்தி சங்கம் சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வெள்ளையன் சுப்பிரமணியம் அவர்கள் கடந்த (23.05.2024) வியாழக் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வெள்ளையன் – பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முருகன் – சிவப்பி தம்பதியினரின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், சஞ்ஜீபன் (பிரான்ஸ்), சஞ்ஜீகா, சஞ்சயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பிருந்தா (பிரான்ஸ்), மயூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அட்விக்கின் (பிரான்ஸ்) அன்புப் பேரனும், காலஞ்சென்ற லட்சுமியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்லையா மற்றும் நாகம்மா, கந்தையா, தவராசா, குகதாசன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2024) ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் தெற்கு சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப 10:00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நெணியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன் நாகமணி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 586) A-1



## மரண அறிவித்தல்



### சண்முகநாதன் இராசலட்சுமி

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் இராசலட்சுமி நேற்று (25.05.2024) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி- நல்லமுத்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் இராசம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சண்முகநாதனின் மனைவியும் காலஞ்சென்ற அன்னலக்சுமி மற்றும் சந்திரதேவாவின் சகோதரியும் காலஞ்சென்ற மனோறஞ்சன் மற்றும் தமிழ்ச்செல்வன் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர் கொக்குவில்), றஞ்சினி, சூரியகுமார், றஜனி, உதயகுமார் ஆகியோரின் தாயாரும் செல்வி, இன்பேஸ்வரி, இந்திரேஸ்வரன் கிருபாலினி, சதீஸ்குமார், ஜாகினி ஆகியோரின் மாமியாரும் லக்ஷிகா, இந்துஜயா, சுகிர்தன், திஷாந், ருக்சிகா, கம்சிகா லெவன்காசிறிராம், றணஜன் ஆகியோரின் பேர்த்தியும் கபிஷாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
தாவடி, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 580) V-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







# ஈழத்தமிழர் விவகாரத்தில் உலகநாடுகள் வேடிக்கை

## இந்தியாவையும் விளாசினார் பா.ம.க.வின் தலைவர் அன்புமணி

சென்னை, மே 26

ஈழத்தமிழர்களுக்கு நீதி வழங்காவிட்டால் இலங்கையுடனான உறவை முறித்துக் கொள்ளப்போவதாக கொழும்புக்கு இந்தியா அழுத்தம் வழங்கவேண்டும் என்று பா.ம.க.வின் தலைவரான அன்புமணி தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையில் உள்ளதாவது:-

"இஸ்ரேலுக்கும், ஹமாஸ் அமைப்புக்கும் இடையிலான போரில் 35 ஆயிரத்துக்கும் கூடுதலானவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கு காரணமான இஸ்ரேல் ஆட்சியாளர்கள் மீது சர்வதேச நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்பட்டு, விசாரணைகள் தொடங்கியுள்ளன. பலஸ்தீன மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நீதி வழங்க மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கைகளை வரவேற்கும் அதே நேரத்தில் இதே நீதி ஈழத்தமிழர்களுக்கு வழங்கப்படாதது ஏன்? என்ற வினாவும் எழுகின்றது.

இஸ்ரேலின் போர்க்குற்றங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் அனைத்தும் வரவேற்கத்தக்கவை. அதேநேரத்தில் இலங்கையில் ஒன்றரை இலட்சம் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட உலகின் மனித உரிமை தொடர்பில் பேசும் நாடுகள் கடந்த 15 ஆண்டுகளாக எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது ஏன்? என்பதுதான் நான் பொதுவெளியில் முன்வைக்க விரும்பும் வினாவாகும். ஆனால், அதற்கு பதில்தான் இல்லை.

சர்வதேச நீதிமன்றத்தின் தலைமை வழக்கறிஞரும், அந்த நீதிமன்றம் அமைத்த சட்டவல்லுநர்கள் குழுவும் வெளியிட்டுள்ள அறிக்கைகளில், தெரிவிக்கப்பட்ட கருத்துகளை ஆய்வு செய்தால், போர்க் குற்றங்கள் தொடர்பாக இஸ்ரேலுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் இலங்கைக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படவேண்டும் என்பது தெளிவாகின்றது - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் உடன் தேவை

2024 ஆம் ஆண்டு A /L தொழில்நுட்பப் பிரிவியலில் தோற்றும் மாணவனுக்கு நல்லூரில் வந்து மீட்டல் பயிற்சி செய்து தரக்கூடிய ஆசிரியர்கள் தேவை.

1. பொறியியல் தொழில்நுட்பவியல்
2. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் (I.C.T. English Medium)
3. தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்

தொடர்பு: 077 200 7836

(cs 55183) (N-1)

## மெடிக்கல் கிளினிக்குக்கு பெண் உதவியாளர் தேவை

இணுவிலிலுள்ள மெடிக்கல் கிளினிக் ஒன்றிற்கு மாலை நேரத்தில் வேலை செய்ய பெண் உதவியாளர் தேவை. A/L படித்த ஓரளவு ஆங்கில அறிவுள்ள அப்பகுதிக்கு அருகிலுள்ளமை விரும்பத்தக்கது. தாவடி, கொக்குவில் பகுதியிலுள்ளோரும் விண்ணப்பிக்கலாம்.

T.P. 077 394 4031

(CS/55146) J-1


## காணி விற்பனைக்கு

- யாழ் விக்ரோரியா வீதியில் 12 பரப்புக் காணி விலை 40 கோடி ரூபாய்.
- யாழ் வைத்தியசாலை வீதியில் 20 அடி அகலம் 200 அடி நீளமும் கொண்ட காணி 12 கோடி ரூபாய்.
- யாழ் வைத்தியசாலை வீதியில் 60 அடி அகலம் 216 அடி நீளமும் கொண்ட காணி 60 கோடி ரூபாய்.
- யாழ் மானிப்பாய் வீதியில் 3 கடைகள் 3 கோடி ரூபாய்.
- யாழ் கஸ்தூரியார் வீதியில் 1 பரப்பில் அமைந்த கடையும், காணியும் 6 கோடி ரூபாய்.
- யாழ் பிரவுன் வீதியில் 5 பரப்புக் காணி 20 கோடி ரூபாய்.
- யாழ் தட்டா தெரு சந்திக்கு அண்மையில் 2 1/2 பரப்புக் காணி 3 கோடி ரூபாய்.
- யாழ் திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் 5 பரப்புக் காணி 7.50 கோடி ரூபாய்.
- யாழ் பிரப்பங்குளம் வீதியில் 5 பரப்புக் காணியும் வீடும் 7.50 கோடி ரூபாய்.
- கொழும்பு வெள்ளவத்தை விவேகானந்தா வீதியில் 6 பேச்சர்ஸ் காணி 4 கோடி 80 இலட்சம்.
- மன்னார் நகருக்கு அண்மையில் நல்ல நிலையில் இயங்கிவரும் மில் 22 கோடி ரூபாய்.
- யாழ் சென்ஜோன்ஸ் பாடசாலைக்கு அண்மையில் குருசோ வீதியில் 6 பரப்புக் காணியில் 3 புதிய வீடும், காணியும் 18 கோடி ரூபாய்.

தொடர்பு:- 077 723 2535

(CS/568) J-1

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 26.09.1989 — உதிர்வு 22.05.2019

### உமேஷ் ஜெகதீஸ்வரன்

திதி : 26.05.2024

உன் உருவம் மறைந்து
ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
அருவமாய் இன்றும் நீ
எம்முடன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறாய் மகனே
உன் நினைவாக நாம் செய்யும் பணிகள்
தடையின்றி தொடர வானுலகில் இருந்து
வாழ்த்தி அருள்வாயாக.

உமேஷ் நினைவாலயம்
இல 35 ஞானவைரவர் கோவிலடி,
கினானை கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

என்றும் உன் நினைவுடன்
அப்பா, அம்மா,
ஜெகதீஸ்வரன், சர்வேஸ்வரி.

(CS/55140) J-1

## வீடு வாடகைக்கு

பலாலி வீதியில் திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் 4 அறைகளுடன் கூடிய அனைத்து வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

077 996 3186

(CS/55168) J-1

## வேலைவாய்ப்பு

**கல்வி சார் ஊழியர்கள்**

எமது பாடசாலையில் பின்வரும் வேலைவாய்ப்பு காணப்படுவதால் தகுதியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கலாம்.

- பௌதிகவியல் - Physics
- உயிரியல் - Biology

விஞ்ஞான ஆய்வு கூட உதவியாளர் - Lab Assistant

- இடம் :- உடுவில் மகளிர் கல்லூரி
- காலம் :- 27.05.2024 - 31.05.2024
- நேரம் :- காலை 8.30 - மதியம் 1.00

அதிபர்

(CR/42477) J-1

## VACANCY

**For Website & You Tube Media**

Male / Female

- VJ (Video Jockey)
- Photographer
- Graphic Designer
- Editor
- Typist - English & Tamil

**Qualification :-**

- Minimum 2 Years Experience
- G.C.E. A/L or Relevant Media Qualifications
- Fluency in Computer Knowledge

Send your CV to mail before you contact

CONTACT - 077 773 9185
Email - lankamedianews@gmail.com

# சட்டவிரோதக் குடியேறிகள் நாடு கடத்தியது மலேசியா

கொழும்பு, மே 26

மலேசியாவுக்கு சட்டவிரோதமாகச் சென்ற ஆயிரத்து 732 இலங்கையர்கள் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என மலேசியாவிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வரையிலான 2 மாத காலப்பகுதியில் சட்டவிரோதமாகச் சென்றோரே நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

மலேசிய அரசாங்கத்தின் புலம்பெயர்ந்தோரைத் திருப்பி அனுப்பும் திட்டத்துக்கு அமைய இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-6 )

## எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம், யாழ்ப்பாணம்

SOS சிறுவர் கிராமங்கள் இலங்கை

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த, கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு பூரண பராமரிப்பை 138 சர்வதேச நாடுகளில் 72 வருடங்களாகவும் இலங்கையில் 42 வருடங்களாகவும் வழங்கி வருகின்ற அரச, மத சார்பற்ற சர்வதேச நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி 1 :- சிறுவர் பராமரிப்பாளர் கற்கை நெறிக்கான பயிற்றுவிப்பாளர் (Instructor – Child Care Centre Assistant)**

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் துறைசார் தகைமை (NVQ Level V) யினை கொண்டிருத்தல் அவசியம்.
- TVEC தரநிலைகளில் பரிச்சயமானதோடு அத்துறை சார்ந்த அனைத்து தகைமைகளையும் கொண்டிருப்பதோடு கற்பித்தல் ஆற்றல் கொண்டிருத்தல் அவசியம்.
- கணினி மற்றும் ஆங்கிலமொழியறிவினை கொண்டிருத்தல் கூடுதல் தகைமையாககருதப்படும்.

**பதவி 2 :- சிறுவர் பராமரிப்பாளர்**

- வயதெல்லை 24-45 இற்கு இடைப்பட்டிருக்கும், தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய பெண்களாயின் உங்களுடைய விபரங்களை எமக்கு அனுப்பிவையுங்கள்
- உங்களுக்காக நாம் வழங்கும் சலுகைகள்
  தங்குமிடவசதி, உணவு, மருத்துவக்காப்புறுதி, ஊக்கத்தொகை, ஓய்வு ஊதியம், EPF, ETF

- இந்நிறுவனத்தில் சேவையாற்ற விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்) 09.06.2024 இற்கு முன்னர் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவும். இப்பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

"SOS Children's Villages Sri Lanka is committed to promote and protect the children's rights and therefore, it is expected that every individual expected to join SOS Children's Villages Sri Lanka understand his/her responsibilities in protecting and keeping children always safe. The highest standards of selection, recruitment and verification procedures will be applied for all employment opportunities with our organization including thorough cross-checking of references."

தொடர்புகளுக்கு:

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்,
இல: 219, நாயன்மார்கட்டு,
நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பே: 021-221-1102
077-37-33-711
மின்னஞ்சல்: jaffna@soscvsrilanka.org
pathmarasa.selvarasa@soscvsrilanka.org

(cs 55153 ) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
07 • 06 • 1960



மறைவு
28 • 05 • 2021

## அமரர் ஸ்ரீரஞ்சினி ஆனந்தகுமாரசாமி

**(யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில மொழி விரிவுரையாளர்)**

**திதி: தேய்பிறை திருதியை (26.05.2024)**

மூன்றாண்டுகள் உருண்டோடினாலும்
விழிகளில் ஈரம் காயவில்லை
ஓயாத அலையாய் ஓயாது அர்ப்பணிப்புடன்
அனைத்து சேவைகளையும் ஆற்றி
ஓய்வெடுக்க முன்னரே நிரந்தர
ஓய்வெடுத்துக் கொண்ட மாயம் என்ன
தாயே ???
எம்மைக் கருவிலும் தோளிலும் சுமந்து
எமக்கான அனைத்தையும் குறைவின்றி செய்து
எமக்கான கடமையினைத் தர மறுத்து
எம்மைத் தவிக்க விட்டுச் சென்ற மர்மம் என்ன
தாயே ???
அப்பாவின் உறுதுணையால்
கல்வியதனில் உச்சம் கண்டீர்கள்
இன்று எம் நிலை காணாது
அவசரம் கொண்டதேன்
தாயே ???
எல்லோர்க்கும் நல்வழி காட்டிய அம்மா
உங்களின் வழிமட்டும் ரணமாய் வலிக்கிறது
தாயே ....

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

36/1 B, காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
021-222 9367

(CS/55042) J-1

# கொடிகாமம் சந்தை இன்று இயங்காது

பொதுச்சந்தையில், வியாபாரத்தில் ஈடு பட்டிருந்த மரக்கறி வியாபாரி ஒருவர் உயிரிழந்த நிலையில் அவரின் இறுதிக் கிரியைகள், இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதால், அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், இன்றைய தினம் சந்தை இயங்காது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ப-9)

# வைகாசிப் பெருவிழா

யாழ்ப்பாணம், மே 26

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வருடாந்த வைகாசிப் பெருவிழா 2024 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஓய்வுநிலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நவீன தொலைத் தொடர்புச் சாதனங்கள் மனித வாழ்வுக்கு வாழ்வளிக்கிறது! வாழ்வளிக்கவில்லை! எனும் தலைப்பில் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் நடுவராகப் பங்கேற்கும் பட்டிமன்றமும், பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெறும். (அ-ஒ-66)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் பிறப்பங் குளம் றோட்டில் 3 பரப்புக் காணி பழைய வீட்டுடன் மற்றும் 2 பரப்பு வெற்றுக் காணியும் **விற்பனைக்கு உண்டு.** இரண்டையும் சேர்த்து 5 பரப்பாகவும் விற்கப்படும். தரகர்கள் தேவையில்லை.

(CR/ 42504) J-1

**077 034 7277, 075 837 7576**

## அறை வாடகைக்கு விடப்படும்

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் பெண்கள் தங்குவதற்கான அறைகள் (Rooms) வாடகைக்கு விடப்படும்.

(CS/55186) N-1

**077 737 4972, 077 737 4970**

## Belarus Job Visa

**ஐரோப்பிய நாட்டில்**
Restorant க்கு
வேலை செய்வதற்கு
**வேலையாட்கள் தேவை.**

(CS/55184) J-1

**076 262 5364, 070 621 3903**

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்ஸா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தூரியம் விற்பனைக்கு உண்டு.


**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு,**
**பிள்ளையார் கோயில் வீதி,**
**கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
K.K.S. வீதி, இணுவில்


# மரண அறிவித்தல்

## இராமுப்பிள்ளை கந்தசாமி (K.R. கந்தசாமி)

**(K.R.K. பிரபல வர்த்தகர் K.R கந்தசாமி அன்கோ, வுவுனியா, குமரன் அன்கோ யாழ்ப்பாணம்)**



**தோற்றம்** 15.10.1940
**மறைவு** 25.05.2024

பாலாவோடை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை கந்தசாமி (K.R. கந்தசாமி) நேற்று (25.05.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் இராமுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - பரிமளம் தம்பதியரின் அன்பு மருமகனும், அமுதமணியின் அன்புக் கணவரும், பேரின்பமலர், ஸ்ரீஹரன் (சிறைச்சாலை திணைக்களம் - யாழ்ப்பாணம்), ஸ்ரீபரன் (சுகாதார அமைச்சு வடமாகாணம்), ஸ்ரீதரன் (பிரதம செயலாளர் செயலகம் வடமாகாணம்), ஸ்ரீகுமார் (உரிமையாளர் - குமரன் அன்கோ), சுதாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராதிகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), தர்ஷினி, சோபிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, தில்லையம்பலம், வேலுப்பிள்ளை , ஆறுமுகம், சுப்பிரமணியம், கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, செல்லம்மா, தேவநாயகி, இராசமணி, யோகராசா மற்றும் யோகரட்ணம், தவமணி, நவமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகிஷன், அபிலாஷ், கிரிஷிகா, கிரிஷன், கவின், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர் தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**98 / 10, பலாலி வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:- **021 221 9193,**
**குமார் - 077 335 9530,**
**ஸ்ரீ - 077 652 8018.**
**தரன் - 077 148 8140,**
**பரன் - 077 459 8430,**

(cs.55189) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரச் சட்டவரைவு ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு!

## நீதிமன்றை நாடவும் முடிவாம்



கொழும்பு, மே 26

நாடாளுமன்றத்தில் திடீரென சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருளாதார மாற்றச் சட்டவரைவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம் என்று ஜே.வி.பி.யின் நிறைவேற்று உறுப்பினரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- தற்போதைய அரசாங்கம் பொருளாதார முன்னேற்றம் என்று கூறிக் கொண்டு, பாரதூரமான சட்டவரைவுகளை நாடாளுமன்றத்தில் முன்வைக்கின்றது. முன்வைக்கப்பட்ட பொருளாதார சட்டவரைவில் முதலீட்டுச்சபையை இல்லாதொழிப்பதற்கான சரத்து உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டவரைவை கொண்டுவருவதற்கான காரணம் என்னவென்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். இந்தச் சட்டவரைவை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம். இதனால் பாதிக்கப்படும் அனைத்துப் பிரிவினரும் ஒன்றிணைந்து இதற்கு எதிராகச் செயற்படவுள்ளோம் - என்றார். (ச-இ)


### திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் தெரிவுகளுக்கு எமது திருமண சேவையை நாடுங்கள். (CS/28128) J-1

தொடர்பு:- 077 964 9245

### THE ROYAL COLLEGE OF JAFFNA

3 மாதங்களல் இலக்கணப்பிழையின்றி ஆங்கிலத்தில் சரளமாகக்கதைக்கப் பயில
By ந. விக்னேஸ்வரன் ஆச்சார்யார்
(26 வருட அனுபவம்)
குபேரன் கட்டட மாடி, பிரான்பற்று வீதி, சங்கானை. (CS/55169) N-1

தொடர்பு: 077 675 1649

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர் கோவிலுக்கு அருகாமையில் உள்ள, நல்லூர் குறுக்கு வீதியில், 2 நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய 11 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு. சுற்றுலா விடுதி, கல்யாண மண்டபம், தொடர்மாடி வீடு கட்டுவதற்கு உகந்தது.
நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள (CS/55180) J-1

Whats App No: +61 416 959 213

### வீடு வாடகைக்குத் தேவை

நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு பலாலி வீதியில் (யாழ். நகரை அண்டிய பகுதியில்) வீடு வாடகைக்குத்தேவை. (CS/55190) N-1

071 990 9306

### விற்பனைக்கு

அபான்ஸ் சிறிய குளிர்சாதன பெட்டி (Mini Fridge) ஒன்று மற்றும் கொம்பியூற்றர் மேசை ஒன்று விற்பனைக்கு உண்டு. (CS/55191) J-1

தொடர்புகளுக்கு: 077 805 2520


"ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ"

### மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 06 . 1956 — மறைவு 25 . 05 . 2024



### செல்வநாயகம் சந்திரலிங்கம்

(SUZUKI Chandran - ஓய்வுநிலை வெல்டிங் பயிற்றுவிப்பாளர், VTA - Jaffna, தொழினுட்பக்கல்லூரி யாழ்ப்பாணம்)

யாழ். இல 14, "சொர்ணவடலி வீதி", கொக்குவில் மேற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் சந்திரலிங்கம் அவர்கள் நேற்று (25.05.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - பொன்னம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான ஆனந்தராசா - ரதிதேவி, செல்லப்பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், நாகநந்தினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, இரத்தினேஸ்வரி, இராஜேஸ்வரி மற்றும் விமலேஸ்வரி (Canada), கணேசலிங்கம் (Australia), நாகேஸ்வரி (Australia), சண்முகலிங்கம் (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்சனா (தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பளை), விமேஸ் (Plumber technician, University of Jaffna), ரவீஷ் (Assistant to Accounts clerk Jkwssp, Nwsdb, Jaffna) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வாஹீஸ்வரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), கிர்த்திகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), அனோஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மேனுஜன், ஜானுகன், அபீஷ், வினுர்ஜன், அஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனும், விக்னராஜா (லண்டன்), விமலராசா, பிரேமினி, வித்தியா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2024)ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 202 2755
077 959 5095
077 844 8434

இல. 14 "சொர்ணவடலி வீதி",
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (CS/55188) J-1

### மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 04 . 1943 — மறைவு 25 . 05 . 2024



### செல்லப்பா தவயோகநாதன்

பத்தமேனி அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா தவயோகநாதன் நேற்று (25.05.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் பாலஞானமணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தவமணிதேவி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புக் கணவரும், நந்தன் (சிவசங்கரி அகம் - ஆவரங்கால்), கவிதா (ஜேர்மன்), சத்தியசீலன் (கனடா), சிவசீலன் (ஆவரங்கால்), வனிதா (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான அன்னலஸ்மி, நமச்சிவாயம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆன்றூட் றொபின்சன் (கண்ணன்), தவராணி, சிவநிதி, உமா, தர்மசீலன் (ஜேர்மன்), றஜனி (சுவிஸ்), ரகுமார் (ஆசிரியர் - முத்துதம்பி வித்தியாலயம் - திருநெல்வேலி), ரவிக்குமார் (கனடா), றஜீபன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமாவும், நாகேஸ்வரி (கனடா), சகுந்தலேஸ்வரி, பாலச்சந்திரன் (லண்டன்), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), செல்வச்சந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், வாமதேவன் (கனடா), பாலச்சந்திரன், மதிவதனி (லண்டன்), கருணா (பிரான்ஸ்), கிருசா (கனடா) ஆகியோரின் சகலனும், கரிஸ்ணன், மதுஸ்ணன் ஆகியோரின் பெரியப்பாவும், திவ்வியன், ஆர்சா, ஆர்சின், அக்சா, பானுசா, கபிசன், பாசறைவாணன், சாலுதன், ஷருஜன், மேகலா, ரபீனா, ஆடேஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.05.2024) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 304 2961

வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால். (cs 45505) (N-1)

### 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 . 09 . 1947 — மறைவு 26 . 05 . 2023



அமரர்

### இராமு நவரட்ணம்


காலம் எமக்கு அளித்த காவலன்
எம் உறவுகள் வாழ வழிஅமைத்த
உத்தமன் நீர் நிரந்தர நித்திரை
கொண்டு ஓர் ஆண்டு ஆனதையா
நம்ப முடியவில்லை எம் நவா அத்தான்
எம்முடன் இல்லையென்ற செய்தியை!!!
எம் சந்ததி நிலைக்கும் வரை
உம் நினைவுகள் எம்முடன்
நிலைத்திருக்கும்

சீலன் குடும்பம் (CS/55160) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏழாலை அத்தியடி விநாயகப் பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த புதன்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ம-25-66)



சித்தன்கேணி - பெரியவளவு ஸ்ரீமகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தின் இரதோற்சவத் திருவிழா கடந்த புதன்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ம-25)



சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தின் இரதோற்சவத் திருவிழா கடந்த வியாழக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ம-25-125)

யாழ். போதனாவில்

# பாதுகாப்பு அலுவலர்களுடன் முரண்பட்ட மூவர் கைது

யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் மதுபோதையில் நுழைந்து பாதுகாப்பு அலுவலர்களுடன் முரண்பட்டு குழப்பத்தில் ஈடுபட்ட மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

நோயாளிகளைப் பார்வையிடும் நேரம் முடிந்த பின்னர் தம்மை உள்நுழைய அனுமதிக்குமாறு பாதுகாப்பு அலுவலர்களுடன் முரண்பட்டு குழப்பத்தில் ஈடுபட்டவர்களே கைது செய்யப்பட்டனர்.

மருத்துவமனை நிர்வாகம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவுசெய்த நிலையில் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் நுழைந்து மதுபோதைக் குழப்பத்தில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-125)



வெசாக் தினத்தை முன்னிட்டு, சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் விசேட பூஜை மற்றும் தான நிகழ்வுகள், சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் பௌத்த மதகுருமார்கள், யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், இந்து மத குரு, சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-27)



குப்பிழான் வடபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் பத்தாம் நாள் திருவிழாவை முன்னிட்டு 108 சங்காபிஷேகமும், அம்பாள் வீதி உலா வரும் திருக்காட்சியும் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ம-25-66)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் நெடுந்தீவு பிரதேச இளைஞர்கழக சம்மேளனமும் இணைந்து நடத்திய சித்திரைப் புத்தாண்டு விழா, நெடுந்தீவு பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஞா.அமலஜான் தலைமையில் நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (ம-25)

# பொன்னாலையில் இன்று பனைத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 26

பனைத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை பொன்னாலை, திருவடிநிலையில் இடம்பெறவுள்ளது.

அழிவடைந்துவரும் பனையைக் காக்கவும், பனை சார் உணவு மற்றும் ஏனைய நன்மைகளை அனுபவித்து ஆரோக்கியம் பெறவும், பாரம்பரியத்தை அடுத்த தலைமுறையினரிடம் கடத்தும் நோக்கிலும் 'பனை இருந்தால் பஞ்சம் இல்லை' எனும் தொனிப் பொருளில் பனைத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது பனைசார் உணவுகளை ருசிபார்த்தல், நுங்கு அல்லது பதநீர் அருந்துதல், பனை பற்றிய உரையாடல்கள், போட்டிகள், விளையாட்டுகள் மற்றும் அடுத்த தலைமுறைக்குப் பனை பற்றிய புரிதலைக் கடத்துதல் எனப் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகவும், அனைவரும் குடும்பமாக இந் நிகழ்வில் கலந்துகொண்டு பயன்பெறுமாறும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஒ-66)


## துயர் பகிர்கிறோம்

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி வசந்தா கருணாகரன் அவர்களின் அன்புக் கணவர்
அமரர் சுப்பிரமணியம் கருணாகரன்
அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.
அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனின் நித்திய இளைப்பாறுதல் பெற வேண்டுகின்றோம்.
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்

## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிநிலைக்கு ஆட்கள் தேவை

கிராபிக் டிசைனர் (Graphics Designer)
ஒப்புநோக்குநர் (Proof Reader)



● முழுநேரம் / பகுதி நேரம்
● ( இரவு )
பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள் நாளை (27.05.2024) திங்கட்கிழமை
மு.ப 9.00 - 12.00 மணிவரையும்
பி.ப 3.00 - 7.00 மணிவரையும்
நேரில் சமுகமளிக்கவும்.

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சுப்பிரமணியம் ஏகாம்பரநாதன்

(ஓய்வுநிலை மதிப்பீட்டாளர் - யாழ் மாநகரசபை, முன்னாள் யாழ் மாவட்ட சாரண ஆணையாளர்)

திதி:- அபரபட்ச திருதியை



மின்னி முழங்குவதுபோல் கணப்பொழுதில்
நிகழ்ந்துவிட்ட உங்கள் பிரிவு ஏன் இத்தனை
அவசரமாய் யார் அழைத்து எங்கு சென்றீர்கள்?
அப்பா... நாங்கள் ஆண்டோறும் திரும்பிவர
மாட்டீர்களா என்று ஏங்கித் தவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

தோற்றம் 01.03.1942 மறைவு 18.05.2022


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ரணில் பங்கேற்கும் அரச நிகழ்வை பரப்புரை மேடையாக்கவேண்டாம்

## கிளிநொச்சியில் மக்கள் கரகோஷம்

கிளிநொச்சி, மே 26

அரச நிகழ்வை ஜனாதிபதி ரணிலின் தேர்தல் பரப்புரை மேடையாக்கவேண்டாம் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தபோது மக்கள் கரகோஷம் எழுப்பியுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு இரணைமடுவில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை புகழ்ந்து தள்ளினார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில், ரணிலுக்கு வாக்களிக்கவேண்டும் எனவும் கோரினார்.

இதன் பின்னர் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், காணி உரிமம் வழங்குவதுபோன்ற ஜனாதிபதியின் அரச நிகழ்வுகளை தேர்தல் பரப்புரையாகப் பயன்படுத்தக்கூடாது எனச் சொன்னதும், நிகழ்வுக்கு வந்திருந்த மக்கள் விசிலடித்து பெரும் கரகோஷம் எழுப்பினர். (ஏ-5)


**காணி விற்பனைக்கு**

மருதனார்மடம் உரும்பிராய் வீதி
1 3/4 பரப்பு, 2 பரப்பு.
திருநெல்வேலி - நாவலடி வீதி
பரப்பு 1 குளி 5.22

**077 104 8865**

**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி வக்சலா கருணாகரன் அவர்களின் அன்புக் கணவர்

**அமரர் சுப்பிரமணியம் கருணாகரன்**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாறுதல் பெற வேண்டுகின்றோம்.

ஆசிரியர் சங்கம்
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்

(CR 42518) V-1

**வகுப்புகள் நடத்துவதற்கு இடம் தேவை**

தொழில்நுட்ப/ பொறியியல் பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு உரிய தளபாடங்களை உள்ளடக்கத்தக்க இடம் யாழ் நகரில் தேவை.
வாடகை/ குத்தகை அடிப்படையில் விரும்பத்தக்கது.
விபரங்களுக்கு

தொடர்பு: **072 280 4099**

யாழ்ப்பாணம், நெல்லியடி, கிளிநொச்சி,
புதுக்குடியிருப்பு, முள்ளியவளை மட்டக்களப்பு,
கல்முனை, திருகோணமலை, மற்றும் வவுனியாவிலும்.....

மேற்கத்தைய நாடுகளில்
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

**IELTS** Academic / General Training

மாணவர்கள் 6.5 band Score பெறுவதற்கு 100% உத்தரவாதம்.

● IELTS, IELTS Ukvi பரீட்சைகள் British College நடைபெறும்.

Spoken Diploma in **English**

● முழுநேர / பகுதி நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

BRITISH COLLEGE Of Education
More information 0777- 695605
23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113

| | |
|---|---|
| Nelliyady. Tel : 021-7284200 | Puthukkudiyiruppu. Tel : 01173-01173 |
| Kilinochchi. Tel : 021-4927114 | Mulliyawalai. Tel : 021-7284344 |
| Kalmunai. Tel : 067-4300207 | Batticaloa. Tel : 011-4802486 |
| Vavuniya. Tel : 024 -4930041 | Trincomalee. Tel : 011-4809246 |

IDP IELTS, Ukvi Exam centre

**சிறுநீரகம் தேவை**

O+ அல்லது O-
வகையைச் சேர்ந்த
சிறுநீரகம் தேவை

தொடர்புகளுக்கு:
077 335 0049, 074 381 3679

யாழ்ப்பாணம், நெல்லியடி, கிளிநொச்சி,
புதுக்குடியிருப்பு, முள்ளியவளை மட்டக்களப்பு,
கல்முனை, திருகோணமலை, மற்றும் வவுனியாவிலும்.....

திருமணம் முடித்து Family வீசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு
அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில சான்றிதழுக்கான பாடநெறி

**IELTS** LIFE SKILLS **A1** UK Qualification

ஜேர்மன், சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு
Spouse, Work, Student விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு

**DEUTSCH**

● A1 A2, B1 பாடநெறிகள் நடைபெறுகின்றது.

பிரான்ஸ் மொழிப் பாடநெறி **FRENCH** நெதர்லாந்து மொழிப் பாடநெறி **DUTCH**

மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

BRITISH COLLEGE Of Education
More information 0777- 695605
23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113

| | |
|---|---|
| Nelliyady. Tel : 021-7284200 | Puthukkudiyiruppu. Tel : 01173-01173 |
| Kilinochchi. Tel : 021-4927114 | Mulliyawalai. Tel : 021-7284344 |
| Kalmunai. Tel : 067-4300207 | Batticaloa. Tel : 011-4802486 |
| Vavuniya. Tel : 024 -4930041 | Trincomalee. Tel : 011-4809246 |

IDP IELTS, Ukvi Exam centre

**மரண அறிவித்தல்**

தோற்றம்
18 . 05 . 1950



மறைவு
25 . 05 . 2024

**முருகேசு ஆறுமுகம்**

முருகேசு ஆறுமுகம் அவர்கள் நேற்று (25.05.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு லக்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கிருஷ்ணன், மனோன்மணி, சிவபாக்கியம், சிவயோகம் ஆகியோரின் அண்ணனும், பரமேஸ்வரியின் அண்ணனும், பாசமிகு பிரபாகரன் (ஜேர்மன்), அனுசுயா, சுபாஸ்கரன் (பிரபா பந்தல் சேவை உரிமையாளர்), அனுராதா ஆகியோரின் அன்புத் தந்தையும், அருளானந்தம், செந்தில்குமார், விஜயறூபினி (சுபி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கலாநிதி, வித்தியா, கபிஸ்னா, கனிசாயினி, தமிழ்ச்செல்வி, தரண்யா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மட்டிவளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

**3ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம்
25 . 07 . 1945



மறைவு
28 . 05 . 2021

அமரத்துவ மாது

**சிவகாமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை**

திதி : 26.05.2024

புன்னகை பூ ஒன்று
உதிர்ந்தது..
சில்லறை சிதறும் சிரிப்பழகி...

"வா இஞ்சை" என அழைக்கும்
எம் தாய் சொல்லாமல் போய் விட்டீர்கள்...

பசியோடு வருவோருக்கு ருசியாக
சுவையாக பரிமாறி
நகைச்சுவையோடு பேசி
புன்னகையோடு வழியனுப்பி வைப்பாய்...

அம்மா உன் ஆத்மா சாந்தி அடையட்டும்
எம் உயிர் உள்ளவரை உன் ஆத்மா எம்மோடு கதை பேசும்...

புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

மகள்:
றஞ்சனாமதி அஞ்சனகுமார்.

(CR 42520) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவேட்பாளரை...

வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனை அவரது இல்லத்துக்கு நேரில் சென்று சந்தித்தார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

வயது முதிர்ந்தவர்கள் எவ்வாறு உரிமைகள் சம்பந்தமாக அரசியல் ரீதியாக யோசிக்கின்றோமோ அவ்வாறு எமது இளைஞர், யுவதிகள் உரிமைகள் சார்ந்து சிந்திப்பதில்லை என ரணில் கூறினார். அவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுத்து மேம்படுத்தவேண்டும். அதில் தான் எமது வருங்காலம் உள்ளது எனவும் தெரிவித்தார்.

பொதுவேட்பாளர் தொடர்பாகவும் இதன் போது பேசப்பட்டது. பொதுவேட்பாளரை எங்களால் நிறுத்தமுடியாது என்ற கோணத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து அமைந்தது. தமிழ் மக்கள் ஒற்றுமையாக, ஒருங்கிணைந்து தீர்மானத்தை முன்னெடுப்பதற்கான தகைமை, பின்னணி இல்லை என்று சொன்ன அவர், அதனால் பொதுவேட்பாளரை நிறுத்த மாட்டோம் என்று குறிப்பிட்டார்.

பொதுவேட்பாளருக்கு ஒருவாக்கு ஏனைய இரண்டு வாக்குகளையும் சிங்கள வேட்பாளருக்கு வழங்குதலையும் அவர் வரவேற்றார். ஆனால், அவருடைய எண்ணம் என்னவென்றால் பொதுவேட்பாளரை தமிழரால் நிறுத்தமுடியாது என்பதாகும். அதே எமக்கு ஒரு வெட்கக்கேடான விடயம். அதை அவர் மனம் திறந்து சொன்னார்.

அவர் தான் பதவிக்கு இன்னும் ஒரு முறை வருவதென்றால் சிறுபான்மையினருடைய ஆதரவு கட்டாயம் தேவை என்பதை ஏற்றுக்கொண்டார். ஆகவே அந்த விதத்தில் சிறுபான்மையினர் பல விடயங்களையும் அவரிடம் இருந்து எதிர்பார்ப்பதாகச் சுட்டிக்காட்டினேன். அதற்கு அவர் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களைத் தொடர்ந்து மாகாணசபைத் தேர்தலையும் நடத்தப் போவதாகக் கூறினார். மாகாணசபையிலுள்ள சிலரையும் மத்தியிலுள்ள சிலரையும் இணைத்து பொருளாதார ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக நான் கூறினேன். "பொலிஸ் அதிகாரம் இன்றியே நீங்கள் அதனை வழங்குவதாகக் கூறுகின்றீர்கள். ஆனால், சஜித் இதனை உள்ளடக்கி கூறுகின்றார். இந்த வேற்றுமை எப்படி உங்களுக்குச் சாதகமாகும்?" எனக் கேட்டேன். அதற்கு "சஜித், அப்படி கூறவில்லையாம். பொலிஸ் அதிகாரம் இன்றியே வழங்குவதாகவே அவரும் கூறுவதாக" ரணில் என்னிடம் சொன்னார்.

எனக்குத் தெரிந்த அளவில் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டையாகத்தான் தெரிகிறது. அவர்களுக்கு எங்களுடைய வாழ்க்கைத்தரத்தை மேலோங்கச் செய்தாலும் அரசியல்ரீதியாக எந்த முன்னேற்றத்தையும் நாங்கள் பெறக்கூடாது அல்லது எங்களை நாங்கள் வலுவாக்குகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்பதில் ரணில் உட்பட மற்றைய அனைவரும் உறுதியாக இருக்கின்றார்கள்.

இதன் காரணமாகத்தான் நாங்கள் ஒரு பொதுவேட்பாளரை நிறுத்த வேண்டும் எனத் தொடர்ந்து கூறுகின்றோம். ஏனென்றால் இதன்மூலம் தான் எமது நிலத்தில் மக்களின் ஒற்றுமையை நிலைநிறுத்த முடியும். எது நடந்தாலும் தமிழ் மக்களுக்கு இவர்கள் கொடுக்கும் வாக்குறுதிகள் காற்றிலே பறக்கவிடப்படுகின்றது.

வடக்கு - கிழக்கிலே நாம் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்த பொதுவாக்கெடுப்பைப் பெற்றுக்கொள்வதால் பல நன்மைகள் கிடைக்கக்கூடும். பல நாடுகளில் இந்த மக்கள் தீர்ப்பால் சுயநிர்ணய உரிமை கிடைக்கப்பெற்றுள்ளது. ஆகவே அதனைப் பெறக்கூடிய வாய்ப்பு எமக்குக் கிடைக்கக்கூடும். பொதுவேட்பாளரை ஆதரித்து போதுமான தமிழர்கள் வாக்களித்தால் எமது மனநிலையை எதிர்பார்ப்புகளை, அபிலாஷைகளை வெளிக்கொண்டு வருவதாக இருக்கும். இதை நான் சொன்னதும், ரணில் சிரிப்புடன் "அது முடியாத காரியம்" என்று கூறிவிட்டுச் சென்றார். மேலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் தனித்துவத்தைப் பற்றி அவர் பேசவில்லை. ஜனாதிபதித் தேர்தல் குறுகிய காலத்தில் நடக்கும் எனவும் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அர்த்தத்தில் அவரின் பேச்சுகள் இருந்தன - என்றார். (அ-ஒ-125)

## தமிழ்ப்...

சிவில் சமூக அமைப்புகளும் இதுவொரு சரியான முடிவென்பதை ஏற்றிருக்கின்றன. தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் மிகவிரைவில் நாங்கள் திட்டவட்டமான முறையில் ஒரு தெளிவான முடிவை எடுத்து மக்களுக்கு அறிவிப்போம் என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் கிளிநொச்சி மாவட்ட நிர்வாகத் தெரிவு நேற்றுச் சனிக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்றது. கூட்டத்தின் நிறைவில் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்மக்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள்? என்பதைச் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு அறிவிப்பதற்கும், சர்வதேச இராஜதந்திரிகள் புரிந்து கொள்வதற்குமாக நாங்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது அவசியம்.

ஜனாதிபதி தமிழ்ப் பிரதிநிதிகளுடன் நடத்தும் பேச்சுகள் அனைத்தும் இதுவரை காலமும் வெறும் பேச்சுகளாகத்தான் இருந்திருக்கின்றன. பேச்சுகளுக்கு மேலாக நடைமுறையில் அவர் சொல்பவற்றைச் செய்வாரெனில் அது சிறப்பானதாக அமையும் - என்றார். (அ-ஒ-66)


### தேவை

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் உள்ள சிறிய உணவகம் ஒன்றுக்கு உதவியாளர் தேவை

தொடர்பு: 075 524 2748

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் நடைபெற்று வரும் கட்டுமான பகுதியில் பின்வரும் கடமைகளுக்கு வேலையாட்கள் தேவை.

01. **இழுவை இயந்திர சாரதி** (Tractor Driver)
02. **நாளாந்த வேலைத் தொழிலாளி (கூலி வேலை)**

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்போர் தகுந்த உடல் ஆரோக்கியதுடன் இருப்பது அவசியம்.

(CS551786) N-1

தொடர்பு: 076 141 6848, 076 284 5878

### செம்மறி கிடாய் ஆடுகள் விற்பனைக்கு

3 மாத வயதிற்கு மேற்பட்ட மேய்ச்சல் பழகிய **செம்மறி கிடாய் ஆடுகள் விற்பனைக்கு உண்டு.**

இடம் :- கெற்பேலி, மிருசுவில், யாழ்ப்பாணம்

(CS/55187) J-1

தொடர்பு:- 076 200 1700

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், சீனியர் ஒழுங்கையில் 5 அறைகள், 3 இணைந்த குளியல் அறைகள் என்பவற்றுடன் கூடிய **வீடு வாடகைக்கு உண்டு.**

(CS/55194) J-1

தொடர்பு:- 077 715 5060

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் உள்ள பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- **வரவேற்பாளர் (Receptionist)**
- **துப்புரவு பணியாளர் (Room Cleaners)**
- **விற்பனைப் பிரதிநிதி (Sales Rep)**
  (Driving License வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது)
- **Electrician**
- **Graphic Designer**

40 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. **ஆண், பெண்** இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

(CS/54838) J-1

தொடர்பு:- 076 012 0283


## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 02 . 1937



மறைவு 24 . 05 . 2024

### இராசரத்தினம் ஞானசக்தி

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் ஞானசக்தி அவர்கள் நேற்று முன்தினம் (24.05.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இராசரத்தினம் (மாவெள்ளை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராஜகுமார், இராஜேந்திரன் மற்றும் இராஜமோகன், ஞானகலா, ஞானபவானி, ஞானவதனி, ஞானவசந்தா, ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரவதனி, தங்கராசா, ரவீந்திரன், சர்வேந்திரன், கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ரஜீவன், சிந்துஜா, சுமித்திரா, நிர்மலா, மயூரா, அகர்சனன், விதுசன், விஸ்ணுகா, வினோத், கேனுசன், கோபிசன், கருஷனன், பிருந்திகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, பாலகிருஷ்ணன் மற்றும் சத்தியதேவி, சத்தியரஞ்சிதம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 03.00 மணியளவில் உரும்பிராய் எருளன் இந்து மயானத்திற்கு தகனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

**தகவல்:**
**மருமகன்**
**த.கிருபாகரன்**
077 170 0101

(CS/55185) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண சேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம், 1976 இல் பிறந்த அரச உத்தியோக மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவுக் கட்டணம் இல்லை.

(CS55181) N-1

**074 242 9737**

## பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகளை செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. காலை 9.00 - 12 00 மணிவரை தொடர்புகொள்ளவும்

(CS55179) N-1

**077 719 5483**

## காணி குத்தகைக்குத் தேவை

கோப்பாய், உரும்பிராய், புன்னாலைக்கட்டுவன், நிலாவரை ஆகிய பகுதிகளில் தோட்டம் செய்வதற்கு (நீண்டகால, குறுகியகால) த்திற்கு குத்தகைக்குத் தேவை.

(CS/55176) J-1

**077 100 5841**

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் வடக்கு (G.G பொன்னம்பலம் வீதி) பலாலி வீதியில் இருந்து 200m தூரத்தில் 3வது காணி **27 பரப்பு தோட்டக் காணி 5 அறை வீட்டு அத்தியாரத்துடன் விற்பனைக்கு உண்டு.**

**தரகர் தேவை இல்லை.**

(CS 570) A-1

தொடர்பு:- **076 877 5021**

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

**சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்**

தொடர்புகளுக்கு: (CS/55110) J-1

**074 173 7684**

www.edustutor.com

## EDUS 077 488 7774

## G.C.E A/L 2026

**கணித விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான புதிய ஒன்லைன் வகுப்புக்கள் ஆரம்பம்..!**

**COM.MATHS | BIOLOGY | PHYSICS | CHEMISTRY | ICT**

**Tamil & English Medium**

Quality learning | Guaranteed Results | Professional Service

ஒன்லைன் கற்பித்தலில் இலங்கையின் முன்னணி ஆசிரியர்களுடன் உங்கள் சாதனைப் பயணத்தை ஆரம்பித்திடுங்கள்..!

(cs.551717)

## அண்ணா

விரைவுப் பொதிகள்

விரைவு - நம்பிக்கை - பாதுகாப்பு

நியாயமான கட்டணத்தில் துரித சேவை

UK - லண்டன்

1,300/=

076 303 5011
076 122 1566
075 330 5500
070 330 5500

## பணியாளர் வெற்றிடம்
## யாழ்ப்பாணம்

- **கணக்காளர் (பெண்கள்) (HNDA/கணினி அறிவுடன் முன் அனுபவம் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்)**
- **கணினி அறிவுடன் கூடிய அலுவலக உதவியாளர் (பெண்கள்)**
- **EPF/ETF கொடுப்பனவு வழங்கப்படும்.**
- **நிரந்தர தொழில்.**

Ess Jey Electricals
No 9, Stanly Road, Jaffna.

(CS/55167) J-1

**021 222 2564, 021 222 7430**

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1993 இல் கனடாவில் பிறந்து எஞ்ஜினியரிங் படித்து கனடாவில் பணிபுரியும் **மணமகளிற்கு தகுந்த வரனை கனடா,** US இல் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

Call/ Whatsapp

(CS55162) J-1

தொடர்புகளுக்கு:- **077 415 4375**

## காணி விற்பனைக்கு

யாழ். கல்வியங்காட்டில் G.P.S விளையாட்டரங்கிற்கு முன்னால் **11 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

Call/ Whatsapp

(CS55161) J-1

தொடர்புகளுக்கு:- **077 415 4375**

## விஸ்டம்
### தொழில்நுட்பக் கல்லூரி

இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தொழில் நுட்பப் பிரிவில் ஒவ்வெரு வருடமும் தேசியமாவட்ட முதல் நிலை சாதனையாளர்களை உருவாக்கிவருகின்ற அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்

**புதிய பிரிவு ஆரம்பம்**

**A/L 2026 தொழினுட்பப் பிரிவு**

**ஆரம்பம் : 01.06.2024 சனிக்கிழமை**
**நேரம் : மாலை : 3.30 மணிக்கு**

- பொறியியல் தொழினுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
- தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, கணிதம் (7). விவசாய விஞ்ஞானம்
- புவியியல். ஊடகக்கல்வி

(cr.42498) (N-1)

தொடர்புகளுக்கு:
077 248 7774
076 552 9093
021 221 7860

## தேவை

**யாழ் நகரில் போன் சொப்பிற்கு**

- விற்பனையாளர்
- பழகவிரும்பும்பவர்
- திருத்துநர்

**வயது 18 - 21**

**சம்பளம் 30,000/ - 40,000/-**

(CS/55163) J-1

தொடர்பு:- **077 199 6117**

## வேலையாட்கள் தேவை

கட்டட நிர்மாண வேலைகளுக்கு **மேசன் மற்றும் கூலி ஆட்கள் தேவை.**

(CS/55195) J-1

தொடர்பு:- **076 760 0403**

## விற்பனைக்கு

**12" China** பட்டறையுடன் **தச்சு வேலைக்கான** அனைத்து உபகரணங்களும் **விற்பனைக்கு உள்ளது.**

**விலை - 400000/-**

(CS/55165) J-1

தொடர்பு:- **077 241 4588**

## சிறுநீரகம் தேவை

சிறுநீரகம் செயலிழந்த 46 வயதுடைய ஒருவருக்கு O(+) குருதிவகையைச் சேர்ந்த **சிறுநீரகம் தேவை.** H.LA Report இருப்பின் Whats app பண்ணவும்.

தொடர்பு:- **076-476 7400**
**075 633 0599**

(CS/55166) J-1

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம், 1984 இல் பிறந்த லண்டன் பிரஜா உரிமை உடைய செவ்வாய் குற்றமில்லாத மணமகனுக்கு நற்பண்பு நிறைந்த மணமகள் தேவை.

(CS55182) (B) N-1

**070 697 9388**

## Now We Are Hiring
## Manager

**White House Funeral Directors, Jaffna** is looking for a **full-time manager**

- **Job Responsibilities**

1. Managing daily and monthly accounts
2. Managing cash flow in and out
3. Involvement in day-to-day office operations and management
4. Handling customers

- **Required Qualifications**

1. Aged between 35 and 60
2. Basic knowledge of accounting
3. Proficiency in Tamil and English (Proficiency in Sinhala will be an added advantage)
4. 1 year of experience in managing a shop

**Salary: Attractive Package**

Interested candidates are encouraged to contact via 0775004511 before May 31st, 2024

**White House Funeral Directors**
**Jaffna**

(cs 54897)

## மணமகள் தேவை

1. வடமராட்சி, இந்து கௌரவ குலம் (V), கார்த்திகை, 1985, MSc, Engineer, Divorce, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
2. நல்லூர் - அளவெட்டி, இந்து, கௌரவகுடும்பம் (V), மகம், 1984, Business Administration, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை.
3. சுன்னாகம் - உடுவில், இந்து, கௌரவகுடும்பம் (V), புனர்பூசம், 1983, Bachelor, Divorce, U.S.A மணமகனுக்கு மணமகள் தேவை.
4. புலோலி , இந்து, கௌரவகுடும்பம் (V), சுவாதி, 1982, BSc Engineer, Divorce, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
5. பளை - சுழிபுரம், இந்து, கௌவரகுடும்பம் (V), அத்தம், 1986, Electrician, கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.
6. பருத்தித்துறை, இந்து, கௌரவகுடும்பம் (V), 1987, உத்தரம், BSc, ACMA, CGMA, Senior Financial Analyst, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
7. தெல்லிப்பளை, இந்து, கௌரவகுடும்பம் (V), 1988, உத்தரம், BScCivil Engineer, Doing Phd, அமெரிக்கா மணமகனுக்கு மணமகள் தேவை.
8. கரவெட்டி, இந்து, கௌரவகுடும்பம் (V), மிருகசீரிடம், 1989, BSc, U.K மணமகனுக்கு மணமகள் தேவை.
9. பருத்தித்துறை, இந்து, கௌரவகுடும்பம் (V), 1990, அவிட்டம், BSc (Hons), கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.

(CS/576) J-1

S.Sarma J.P, Astrologer
Phone - **077 539 3728**
Whats app - **077 803 8193**

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம், 1989 இல் பிறந்த 2 இல் செவ்வாய் குற்றமுள்ள அரச சார்பற்ற நிறுவனத்தில் வேலை செய்யும் சைவ போசன மணமகளுக்கு நற்பண்புள்ள மணமகன் தேவை.

(CS55182) (A) N-1

**070 697 9388**

## ICT, Science Class

தரம் 6 - 11 (தமிழ் / ஆங்கில மொழி மூலம்) பிரபல பாடசாலையில் கற்பிக்கும் 5 வருடத்துக்கு மேற்பட்ட அனுபவம் கொண்ட ஆசிரியரால் வீடு வந்து தனியாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும். (Unit Exam, Term Exam, O/L Exam க்கு ஏற்ப தயார்படுத்தப்படும்)

Contact No:- **070 765 9269**

## கடை வாடகைக்கு

வேலணை வங்களாவடி சந்திக்கு அருகாமையில் குறிகாட்டுவான் வீதியில் புதிதாக கட்டப்பட்ட கடைகள் வாடகைக்கு கொடுக்கப்படும்.

(CS/55193) J-1

தொடர்பு:- **077 076 6993**


:021 493 0000 - விளம்பரம்:021-493 1111

advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளிவாய்க்கால் கஞ்சிக்காக
கைது செய்த பொலிஸ்காரர்
நள்ளிரவுதாண்டியும் தானம் கொடுக்க ,
நாமென்ன செய்தோம்?
துள்ளிக்குதித்தோடி குதூகலமாக
முண்டியடித்து வாங்க
எள்ளிநகையாடுகின்றன
மாவீரக் கல்லறைகள்!
ஒட்டுக்குழுச் சுவாமிகள்

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | வைகாசி 13 | ஞாயிற்றுக்கிழமை | (26.05.2024) | சிகரம் : 203

# தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்ப்பவர்களிடம் சில கேள்விகள்



○ நிலாந்தன்

தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற விடயம் தமிழரசியலில் ஓர் உத்வேகத்தை (momentum) தோற்றுவித்திருக்கிறது என்று கொழும்புமைய ஊடகம் ஒன்றின் ஆசிரியராக இருந்த ஒரு மூத்த ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார். அதனால்தான் பொதுவேட்பாளருக்கு எதிராக கருத்துகளைத் திரட்டுபவர்கள் அதிகம் ஆவேசமாகவும் உணர்ச்சிகரமாகவும் காணப்படுகிறார்கள். அதில் பல கருத்துகள் தர்க்கபூர்வமானவை அல்ல.

தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற தெரிவு அதை எதிர்ப்பவர்களை எந்த அளவுக்கு தற்காப்பு நிலைக்குத் தூண்டியிருக்கிறது என்பதற்கு கடந்த வாரம் வெளிவந்த ஒரு செய்தி நல்ல எடுத்துக்காட்டு. அந்தச்செய்தியில் சம்பந்தர் ஒஸ்லோ பிரகடனம் என்று அழைக்கப்படும் ஆவணத்தை முன்வைத்து கருத்துத் தெரிவித்திருக்கிறார். '13 பிளஸ்' எக்கிய ராஜ்ய என்றெல்லாம் உரையாடப்பட்ட ஓர் அரசியல் பரப்பில், இப்பொழுது ஒஸ்லோ ஆவணத்தை முன்னிறுத்த வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை பொதுவேட்பாளர் என்ற தெரிவு ஏற்படுத்தியிருக்கின்றதா?

கடந்த 15 ஆண்டுகளாக ஏன் அந்த ஆவணத்தை முன்வைத்து உரையாடப்படவில்லை? அதைவிட முக்கியமாக அந்த ஆவணத்தை அடிப்படையாக வைத்துத்தான் 2015 2018 வரையிலும் ஒரு புதிய யாப்புக்கான இடைக்கால வரைபு தயாரிக்கப்பட்டதா ?

முதலில் அந்த ஒஸ்லோ ஆவணத்தைப் பார்க்கலாம். அது ஒரு பிரகடனம் அல்ல. ஆங்கிலத்தில் Oslo communique என்றுதான் காணப்படுகின்றது. தமிழில் அதனை நிலைப்பாட்டு ஆவணம் என்று கூறலாம். அதில் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளும் ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வந்திருந்தன. அந்த நிலைப்பாடு பின்வருமாறு...'உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழ் பேசும் மக்களுக்கு, தமது வரலாற்று ரீதியிலான, பாரம்பரிய வாழ்விடத்தில், ஐக்கிய இலங்கைக்குள், சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தொடர்பாக இரு ஆராய இரு தரப்பும் உடன்படுகின்றன.'



அதாவது உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை ஆழமாக ஆராய்வது என்றுதான் அங்கு கூறப்பட்டிருக்கிறது. அதே சமயம் அந்த உடன்பாடு எத்தகைய ஓர் அரசியல் சூழலில் எட்டப்பட்டது? அது நோர்வேயின் அனுசரணையோடு இணைத்தலைமை நாடுகளால் முன்னெடுக்கப்பட்ட ஒரு சமாதான முயற்சி. அதாவது மூன்றாவது தரப்பு ஒன்றின் அனுசரணையோடு முன்னெடுக்கப்பட்ட ஒரு சமாதான முயற்சி. இது மிக முக்கியமானது. இலங்கையின் இனப்பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினை அல்ல. அது ஓர் அனைத்துலகப் பிரச்சினை. உலகில் உள்ள எல்லாத் தேசிய இனப்பிரச்சினைகளும் சாராம்சத்தில், அனைத்துலகப் பிரச்சினைகள்தான். உள்நாட்டுப் பிரச்சினை ஒன்றில் வெளிநாடுகள் தலையிடும் போதுதான் தேசிய இனப்பிரச்சினைகள் உலகின் கவனத்தை ஈர்க்கும் வளர்ச்சிகளைப் பெறுகின்றன. எனவே தேசிய இனப்பிரச்சினைகள் சாராம்சத்தில் அனைத்துலகப் பிரச்சினைகள்தான். அவற்றுக்கு அனைத்துலகத் தீர்வுகள்தான் உண்டு. உள்நாட்டுத் தீர்வுகள் கிடையாது.

திம்புவில் தொடங்கி ஒஸ்லோ வரையிலும் அதுதான் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 15 ஆண்டுகளாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களும் அதைத்தான் நிரூபிக்கின்றன. இலங்கை இனப்பிரச்சினைக்கு அனைத்துலகத் தீர்வுதான் உண்டு. மூன்றாவது தரப்பு ஒன்றின் தலையீட்டோடு அந்தத் தீர்வு உருவாக்கப்படவேண்டும்.

எனவே ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணத்தை அதன் அனைத்துலகப் பரிமாணத்துக்குள் வைத்து முதலில் விளங்கிக்கொள்ளவேண்டும். அந்த அடிப்படையில் பார்த்தால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது தரப்பின் கண்காணிப்பின் கீழ் ஓர் உடன்படிக்கைக்கு வர எந்த ஜனாதிபதி வேட்பாளர் தயார்? அவ்வாறு எந்த ஒரு ஜனாதிபதி வேட்பாளராவது தயாராக இருந்தால், ஒரு பொது வேட்பாளருக்கான தேவை இருக்குமா?

எனவே பொதுவேட்பாளர் என்ற தெரிவுக்கு எதிராக ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணத்தை முன்வைப்பவர்கள் அந்த விடயத்தில் தென்னிலங்கையில் உள்ள மூன்று பிரதான வேட்பாளர்களில் யார் ஒரு மூன்றாவது தரப்பின் மேற்பார்வையில் தமிழ் மக்களோடு உடன்பாட்டுக்கு வரத் தயார்? என்பதனை வெளிப்படுத்தவேண்டும்.

கடந்த மே தினத்தில் கிளிநொச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் உரையாற்றியதுபோல, தமிழ் மக்களோடு அப்படி ஓர் உடன்படிக்கைக்கு வரக்கூடிய தென்னிலங்கை வேட்பாளர் தமிழ்மக்கள் மத்தியில் 100 வாக்குகளைப் பெறலாம். ஆனால் தென்னிலங்கையில் அவர் ஆயிரம் வாக்குகளை இழக்கவேண்டியிருக்கும் என்பதுதான் இலங்கைத் தீவின் இன யதார்த்தம். 15ஆண்டுகளின் பின்னரும் அதுதான் இலங்கைத்தீவின் இன யதார்த்தமாக உள்ளது என்பது எத்துணை குரூரமானது?

தமிழ் மக்களோடு மிகச்சாதாரண அடிப்படைகளில் ஓர் உடன்படிக்கைக்கு வரக்கூட எந்தவொரு தென்னிலங்கை வேட்பாளரும் தயாராக இல்லை. இப்போதுள்ள ஜனாதிபதிதான் ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணம் உருவாக்கப்படுகையில் பிரதமராக இருந்தவர். அவர் இப்பொழுது என்ன கூறுகிறார்? இனப்பிரச்சினையை வடக்கின் பிரச்சினையாகத் தந்திரமாகக் குறுக்குகிறார். இப்பொழுது பொருளாதார நெருக்கடிக்குத்தான் தீர்வு தேவை என்று சூசகமாகக் கூறுகிறார். எல்லாவற்றையும் விட முக்கியமாக பொலிஸ் அதிகாரம் இல்லாத ஒரு'13ஐ' தரலாம் என்று கூறுகிறார். அதாவது '13மைனஸ்'. மற்றவர் சஜித் பிரேமதாஸ. அவர் '13பிளஸ்' என்று கூறுகிறார். ஒரு தீர்வை முன்வைத்து மூன்றாவது தரப்பு ஒன்றின் மேற்பார்வையின் கீழ் ஒரு சர்வதேச உடன்படிக்கைக்கு வர அவர்

08

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரவிராஜ் கொலை;

## சில நினைவுகள்

கே.வி.தவராசா

[2006 - 2016]



2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி காலை 8 மணி.

'தெரண' தொலைக்காட்சிக்குச் சென்று, அங்கு நேர்காணலில் சிங்கள மொழியில் கேட்கப்பட்ட பல கேள்விகளுக்குப் பதிலளித்துவிட்டு வீடு திரும்பினார் சட்டத்தரணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவிராஜ். பின்னர், வீட்டில் இருந்து நீதிமன்றம் நோக்கிப் புறப்பட்டார். அப்போது நேரம் காலை 8.45 மணி.

இராணுவத்தினரினதும், பொலிஸாரினதும் தீவிர கண்காணிப்புக்கு உட்பட்ட, அதிபாதுகாப்பு நிறைந்த நாரஹேன்பிட்டி எல்விட்டிகல மாவத்தைக்கு அருகாமையில் சென்றுகொண்டிருந்த ரவிராஜின் வாகனத்தின் அருகே திடீரென மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாத துப்பாக்கிதாரிகள், ரவிராஜ் மீதும் மெய்ப்பாதுகாவலர்கள் மீதும் சரமாரியாகச் சுடத்தொடங்கினர். பின்னர் அங்கிருந்து தப்பியும் சென்றுவிட்டனர்.

இந்தச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த ரவிராஜ் மிகவும் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையின் அவசரப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார். இருப்பினும் தலைப் பகுதியில் ஏற்பட்ட கடுங்காயம் காரணமாக காலை 9.20 மணிக்கு உயிரிழந்தார். ஏறத்தாழ 15 வருடங்களாக தமிழ் அரசியல் கைதிகளுக்காக வழக்குகளில் ஆஜராகிய சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமான நடராஜா ரவிராஜ் மீதான படுகொலை நடவடிக்கை, ஏறக்குறைய குமார் பொன்னம்பலத்தினை கொலை செய்த அதே பாணியில் நடந்திருந்தது.

சம்பவம் நடைபெற்ற தினம் நான் நீர்கொழும்பு நீதிமன்றத்துக்குச் சென்று கொண்டிருந்தேன். ரவிராஜ் சுட்டுக்கொல்லப்பட்ட தகவலை எனது துணைவியார் தொலைபேசி மூலம் எனக்குத் தெரிவித்தார். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் உடனடியாக கொழும்பு திரும்பினேன். கொழும்பு தேசிய மருத்துவமனையில் ஓர் அறையில் ரவிராஜின் சடலம் வைக்கப்பட்டிருந்தது. அறையினுள்ளே சென்று ரவிராஜின் சடலத்தைப் பார்த்த அந்தக் கணம் மனதைப் பிசையும் வேதனையை இப்போதும் தருகின்றது.

இலங்கை சட்டத்தரணிகளின் சங்கத்தில் ரவிராஜ் ஓர் உறுப்பினராகவிருந்த போதிலும் அவரது இறுதிக்கிரியையில் கலந்து கொள்வதையோ அவரது உடலுக்கு இறுதி மரியாதை செய்வதையோ சட்டத்தரணிகள் சங்கம் தவிர்த்தது . பொதுவாக சங்கத்தின் உறுப்பினர்கள் யாராயினும் மரணித்தால், இறந்தவரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்துவதுதான் சங்கத்தின் பாரம்பரியமான மரபு. ஆனால் தனது சட்டத்தொழில் நிமித்தம் நீதிமன்றம் வரும் வழியில் சுட்டுக்கொல்லப்பட்ட ரவிராஜின் இறுதிக்கிரியையில் கலந்துகொள்வதையோ அவரது உடலுக்கு இறுதி மரியாதை செய்வதையோ சட்டத்தரணிகள் சங்கம் தவிர்த்தது ஏன்? தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளுக்காக அவர் குரல் கொடுத்தமையினாலா?

### நீதிமன்றத்தின் அனுமதி

ரவிராஜின் பூதவுடலை அவரது ஊரான சாவகச்சேரிக்கு எடுத்துச்சென்று இந்து முறைப்படி சமயச்சடங்குகளை நடத்த முடிவெடுக்கப்பட்டது. இதற்காக நீதிமன்றின் அனுமதியைப் பெறுவதற்காக நீதிவான் நீதிமன்ற நீதிபதி இசடீனை அணுகியபொழுது சில இடர்பாடுகளுக்கு மத்தியிலும் உடனடியாக நீதிமன்ற அனுமதியை வழங்கினார்.

ரவிராஜ் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் தமது குடும்ப அங்கத்தவர்களுக்கு கூறியதற்கு அமைய பூதவுடல் அவரது ஊரான சாவகச்சேரிக்கு எடுத்துச்செல்லப்படவிருந்த நாளுக்கு முதல் நாள் இரவு நானும் எனது துணைவி யாரும் ரவிராஜோடு நெருங்கிப் பழகிய நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் சிங்கள, முஸ்லிம் சட்டத்தரணிகளை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோம். அவர்களுடன் இணைந்து மறுநாள் காலை 6 மணிக்கு ரவிராஜின் பூதவுடலை சட்டத்தரணிகளான நாங்கள் பாரமெடுத்தோம். ரவிராஜின் பூதவுடலை ஊர்வலமாகக் கொண்டு செல்கையில் பல நூற்றுக்கணக்கான தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் இறுதி மரியாதை செலுத்தி முடித்ததும், ரவிராஜின் குடும்பத்தினரிடமும் உறவினர்களிடமும் பூதவுடலைக் கையளித்தோம். அதன் பின்னரே அவரது பூதவுடல் விமானம் மூலம் யாழ்ப்பாணம், எடுத்துச் செல்லப்பட்டு சாவகச்சேரியில் தகனம் செய்யப்பட்டது.

### மூன்று சந்தேகநபர்கள்

ரவிராஜ் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து மூன்று சந்தேகநபர்கள் கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி இசடீன் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். ரவிராஜின் குடும்ப நலனைக் கவனிக்கும் சட்டத்தரணியாக நான் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தேன். அந்த மூன்று சந்தேகநபர்களும் என்னை விறைத்த முகத்துடன் முறைத்துப் பார்த்த கொடூரமான பார்வை இருக்கின்றதே, அந்தப் பார்வை 'அடுத்தது நீதான் ' என்று அவர்கள் சொல்லாமல் சொல்லியதைப் போல இருந்தது.




தமிழ் அரசியல் கைதிகளின் மேலும் அதிக அக்கறை காட்டியது மட்டுமின்றி கொழும்பில் தமிழ் மக்கள் காணாமல் போதல், வெள்ளைவான் கடத்தல், கப்பம் என்பன யுத்த காலத்தில உக்கிரம் அடைந்திருந்த வேளையில் அவற்றைத் தடுக்குமாறு கோரி பல போராட்டங்களில் கலந்துகொண்டு தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தவர் நாடாளுமன்ற உறுப்பினரான ரவிராஜ். அப்படிப்பட்ட உன்னதமான ஒருவர் சதிகாரர்களால் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டமை, தமிழ் மக்களையும் தமிழ் அரசியல் கைதிகளையும் பொறுத்தவரையில் மாபெரும் இழப்புத்தான்.

### சிங்கள மொழிப்புலமை

வடக்கு - கிழக்கைச் சார்ந்த தமிழ் மக்கள் மட்டுமின்றி தெற்கு , மேற்கு என நாட்டின் பல பகுதிகளிலும் தமிழ் மக்கள் முகம் கொடுத்த பிரச்சினைகளை, துன்பங்களை, துயரங்களை பெரும்பான்மை இனத்துக்கு அவர்களது மொழியிலேயே ஊடகங்கள், தொலைக்காட்சி நேர்காணல் மூலம் எடுத்துரைத்த ஒரே நாடாளுமன்ற உறுப்பினரான ரவிராஜ் கொலை செய்யப்பட்ட பின்னர், சிங்கள மக்களிடையே அவர்களது மொழியில் எங்கள் பிரச்சினையைச் சொல்லக்கூடிய ஆளுமை வெற்றிடம் நிரந்தரமாகிப் போய்விட்டது.

ரவிராஜ் கொலை செய்யப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் மேல் நீதிமன்றில் அவரைச் சந்தித்திருந்தேன். அப்போது அவரது பாதுகாப்பில் கவனம் செலுத்தும்படி நான் ரவியிடம் கூறினேன். அதற்கு 'தவா அண்ணா பயந்து என்னதான் செய்வது? நடக்கின்றபடி நடக்கட்டும் " என்று சிரித்தபடி அவர் பதிலளித்திருந்தார். அந்தச் சந்திப்புத்தான் ரவி கொலை செய்யப்படுவதற்கு முன்னர் நான் இறுதியாக ரவியை சந்தித்த கடைசிச் சந்திப்பாக அமைந்துவிட்டது. கோழைகளின் துப்பாக்கிக் குண்டு பட்டு மரணமடைந்த போதிலும் இறந்தும் தமிழ் மக்கள் மனதில் இறவாத மறையாத இடத்தைப்பிடித்தவர் ரவி.



தனி மனிதன் மீதோ அல்லது குறிப்பிட்ட சமூகத்தைப் பற்றியோ விமர்சனக் கணைகளைத் தொடுப்பவர்கள் எதிர் விமர்சனங்களைத் தாங்கக்கூடிய அல்லது அதற்கு அதே முறையில் பதில் வழங்கும் சக்தியையும் உடையவர்களாக இருக்கவேண்டும். கருத்துகளை கருத்துகளால் சந்திக்க முடியாதவர்கள் விமர்சனங்களுக்கு எதிர் விமர்சனங்களினால் பதிலளிக்க முடியாதவர்கள் ஆயுதங்களை பாவித்து எதிர்க் கருத்துகளை அழிக்க நினைப்பது இயலாமையும் பச்சோந்தித்தனமுமே அன்றி வேறொன்றில்லை.

### மேல் நீதிமன்ற வழக்கு விசாரணை


2006 ஆம் ஆண்டு ரவிராஜின் கொலைச் சம்பவத்தையடுத்து 2016 ஆம் ஆண்டு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் கடற்படைப் புலனாய்வுப்பிரிவினர் மூவர் உட்பட ஐவரை எதிரிகளாகப் பெயர் குறிப்பிட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது . இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் வழக்கு விசாரணையை மூன்று நீதிபதிகள் கொண்ட 'ட்ரயல் அட் பார்' முறையில் முன்னெடுப்பதே சிறந்தது என்று மாவை சேனாதிராஜாவுக்கு நான் ஆலோசனை வழங்கினேன். ஆயினும் இடையில் நடந்த சில விடயங்கள் அந்த வழக்கு விசாரணைகளில் நான் ரவிராஜின் குடும்ப நலன் சார்பில் பிரசன்னமாவதைத் தவிர்க்கும்படியாகிவிட்டது.

ஜூரி சபை முன்னிலையில் இடம் பெற்ற வழக்கு விசாரணையில் சட்டத்தரணி விரான் அங்கட்டலும் சிரேஷ்ட சட்டத்தரணி எம். ஏ சுமந்திரனும் ரவிராஜின் குடும்ப நலன் சார்பில் ஆஜராகினர். ஜூரிசபை மூலம் இந்த வழக்கில் நீதியை நிலைநாட்டுவது சாத்தியமானதாகத் தென்படவில்லை. அதனாலேயே நான் அதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கி இருந்தேன். ஆயினும் இந்த வழக்கு விசாரணை மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலக முன்னிலையில் விசாரணை இடம்பெற்று 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் 24 ஆம் திகதி வரலாற்றில் முதன் முதலாக நடுஇரவில் 12.15 மணிக்கு ஐந்து எதிரிகளையும் வழக்கிலிருந்து விடுவித்து தீர்ப்பளிக்கப்பட்டு, அவர்கள் விடுதலையும் செய்யப்பட்டனர்.

இந்தக் காலப்பகுதியில் எனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. மிக முக்கியமான அனைத்து முன்னணி வழக்குகளிலும் எனது பிரசன்னமும், அடிப்படை உரிமைகள் வழக்குகளைத் தாக்கல் செய்து அவற்றை உரிய முறையில் நிலைப்படுத்திய கௌரி சங்கரியின் இடைவிடாத ஒழுங்கமைந்த சீரான தொடர்முயற்சியும் தான் அப்படியொரு அச்சுறுத்தலை ஏற்படுத்தின. அதற்காக நாங்கள் இருவரும் ஓய்ந்துவிடவில்லை. இது குறித்துக் கலந்துரையாடும் போது ' வாழும் வரை மக்களுக்கும் மனிதத்துக்கும் நீதியை நிலைநாட்டஎமது கடமையைச் செய்வோம். நமது பணியை காலம் பார்த்துக்கொள்ளும்' என்று புன்னகையோடு உறுதியாக கௌரி கூறிய வார்த்தை இன்றும் என் மனதில் உள்ளது. கௌரி சங்கரி எந்தச் சூழ்நிலையிலும் கொஞ்சம் கூட அச்சப்படவுமில்லை, சலனப்படவுமில்லை. அதுவே எனக்கு மலையளவு பலத்தைத் தந்தது. ஆனால் இந்தக்காலப்பகுதியில் எனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதை பல்வேறு நண்பர்கள் அக்கறையுடன் சுட்டிக் காட்டியதோடு பாதுகாப்பில் கூடுதல் கவனம் எடுக்கும்படியும் வேண்டிக் கொண்டார்கள். எல்லாம் ஓய்வுக்கு வந்தது போல் தென்பட்டாலும் இன்னும் நான் எனது நீதித்துறைச் செயற்பாடுகளில் ஓய்வின்றி ஓடிக் கொண்டிருக்கின்றேன். காலம் மௌனமாகத்தான் இருக்கின்றது.

*(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விபரீத முடிவுகள்

## தொடருமா....?

தி.ராஜ்

15 ஆண்டுகளில் ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வு நீதி கோரிய பயணம் என்ற இரண்டு முக்கியமான இலக்குகளில் எதையும் அவர் அடையவில்லை. மாறாக தமிழர்களை சவக்குழிக்குள் தள்ளும் கைங்கரியத்தையே இத்தனை ஆண்டுகளில் சம்பந்தன் முன்னெடுத்திருக்கின்றார்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னரான சூழலில் தமிழ் மக்களை வழிநடத்தும் தலைமைத்துவம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வந்து சேர்ந்தது. கூட்டமைப்புக்கு வந்து சேர்ந்தது என்பதைவிடவும் இரா.சம்பந்தனின் கைகளில் பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல கிட்டியது என்பதுதான் பொருத்தமானது . ரணில் விக்கிரமசிங்கவுக்கு எப்படி ஜனாதிபதி பதவி கிடைத்ததோ அதேபோன்று சம்பந்தனின் மடியிலும் தலைமைத்துவம் அதிர்ஷ்ட வசமாக விழுந்தது.

இந்த 15 ஆண்டுகளில் ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வு - நீதி கோரிய பயணம் என்ற இரண்டு முக்கியமான இலக்குகளில் எதையும் அவர் அடையவில்லை. மாறாக தமிழர்களை சவக்குழிக்குள் தள்ளும் கைங்கரியத்தையே இத்தனை ஆண்டுகளில் சம்பந்தன் முன்னெடுத்திருக்கின்றார். சம்பந்தனால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எதுவும் தமிழர்களின் பயணத்தை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்தவில்லை. இதில் சம்பந்தன் மாத்திரமல்ல அவரின் அரசியல்வாரிசாக அறிமுகப்படுத்தப்பட்ட சுமந்திரனும் இணைந்தே தமிழர்கள் தொடர்பான தீர்மானங்களை எடுத்திருந்தனர். அந்தத் தீர்மானங்கள் எவையும் தூரநோக்கற்றவை - தீர்க்கதரிசனமற்றவை என்பதையே காலம் நிரூபித்திருக்கின்றது.

வல்லாதிக்க சக்திகளை திருப்திப்படுத்துவதும் அவர்களுக்கு வேண்டியதைச் செய்வதற்கும் தங்களுக்குத் தேவையான அரசியல் இலாபங்களை அடைந்து கொள்வதற்குமாக இந்த 15 ஆண்டுகளில் இந்த சம்பந்தர்- சுமந்திரன் என்னும் இரட்டையர் கூட்டு பல தீர்மானங்களை மேற்கொண்டு ஒட்டுமொத்த தமிழர்களையும் படுகுழிக்குள் தள்ளியிருக்கின்றது. இதிலிருந்து தமிழர்கள் மீளத் துடிக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மீண்டும் மீண்டும் அவர்களை ஆழப் புதைக்கும் வேலையையே இந்த இருவரும் இணைந்து முன்னெடுப்பது மாத்திரமல்லாமல், தமிழ் மக்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கிக் கொண்டிருக்கும் தமிழ் அரசுக் கட்சியையும் அந்தப் பாதையை நோக்கித் தள்ளிக்கொண்டு சென்று கொண்டிருக்கின்றனர். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிலிருப்பவர்களும் முதுகெலும்பு இல்லாமல், இந்த இணையின் இழுப்புக்குப் பின்னால் சென்றுகொண்டிருக்கின்றனர். தமிழர்களுக்கு பாதகமான முடிவை எடுக்கின்றோம் எனத் தெரிந்தும் அதற்கு உடந்தையாகப் பயணிக்கின்றனர்.

2009 ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி பேரழிவுடன் போர் நிறைவுக்கு வந்தது. போரின் சூடு ஆறுவதற்கு முன்னரே அதாவது மே 21ஆம் திகதி இந்தியாவின் அப்போதைய வெளிவிவகார அமைச்சின் செயலர் சிவ்சங்கர் மேனன், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் இருவரும் இலங்கைக்கு வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை கொழும்பில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில், போர் முடிந்து விட்டது. இனித் தமிழர்களுக்கு 13ஆவது திருத்தச் சட்டம்தான் தீர்வு. அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் அதைத் தலையாட்டி ஏற்றுக்கொண்டார். கூட்டத்தில் இருந்த சுரேஷ் பிரேமச்சந்திரன், 1987ஆம் ஆண்டு தமது ஈ.பி.ஆர்.எல்.எப். மாத்திரமே அதை ஏற்றுக்கொண்டதாகவும், அதுவும் இந்திய இராணுவம் இருந்தமையாலேயே ஏற்றுக்கொண்டதாகவும் குறிப்பிட்டார். பல தரப்புகளும் அதை நிராகரித்திருந்தன என்றும் 22 வருடங்களின் பின்னர் அதை எப்படி ஏற்கமுடியும் என சுரேஷ் கேள்வி எழுப்பும்போதே, குறுக்கிட்ட தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன், 'தமிழ் மக்களுக்கு எது தேவை என்பது உங்களை விட எங்களுக்கே நன்றாகத் தெரியும். 13ஆம் திருத்தம்தான் தீர்வு ' என்ற பதிலை கட்டளைப்பாணியில் சொல்லியிருந்தார். இந்தச் சந்திப்பில், 'தமிழ் மக்கள் 13ஆம் திருத்தத்தை நிராகரித்திருந்தனர் . 22ஆண்டுகள் பின்நோக்கிச் செல்லமுடியாது' என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சொல்ல, வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன், இந்தியாவுக்கு வாருங்கள் அதைப்பற்றிக் கதைக்கலாம் என்று கூட்டத்தை அவசர அவசரமாக முடித்திருந்தார்.

போர் முடிந்த அந்தத் தருணத்திலிருந்து தமிழர்களுக்கு பாதகமான முடிவுகளை இந்தியா என்ற பிராந்திய சக்தி திணித்தபோது,அதைத் தலையால் ஏற்றுக்கொண்டவர்தான் சம்பந்தன். தமிழர்களை சவக்குழிக்குள் தள்ளும் சம்பந்தனின் பயணம் இந்த இடத்தில்தான் வெட்டவெளிச்சமானது. தொடர்ந்து 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தலில் போருக்கு உத்தரவிட்ட மஹிந்த ஒருபுறமும் மறுபுறம் போரை வழிநடத்திய தளபதி பொன்சேகா மறுபுறமுமாகக் களமிறங்கினர், இந்தத் தேர்தலில் பொன்சேகாவை களமிறக்கியது அமெரிக்கா தான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எந்தக் கேட்டுக்கேள்வியுமின்றி பொன்சேகாவை ஆதரித்தது. போர்க்குற்றங்கள் இழைத்த இராணுவத்தை வழிநடத்திய தளபதியை தமிழ் மக்களைக் கொண்டே ஆதரிக்கச் செய்தது கூட்டமைப்பு. பொன்சேகா கூட இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார். இராணுவம் போர்க்குற்றத்தில் ஈடுபட்டிருந்தால் எப்படி தமிழ் மக்கள் எனக்குப் பெருவாரியாக வாக்களித்திருப்பார்கள்? என்ற கேள்வியை அவர் எழுப்பியிருந்தார். இது சம்பந்தன் செய்த மிகப்பெரிய தவறு என்பதை காலம் இப்போது சுட்டிக்காட்டி நிற்கின்றது.

அதன் பின்னர் இலங்கை விவகாரத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் முடக்கும் நிகழ்ச்சி நிரலை அமெரிக்கா முன்னெடுக்க அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முட்டுக்கொடுக்கச் செய்யும் கைங்கரியத்தை சம்பந்தன் சுமந்திரன் இணை முன்னெடுத்தது. அப்போதைய இலங்கையின் ஆட்சியாளரான மஹிந்த, சீனாவின் பக்கம் சாய்ந்த நிலையில் இலங்கையை வழிக்குக் கொண்டு வர வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு இருந்தது. அதற்கான வழிமுறையாக மனித உரிமைகள் பேரவையில் இலங்கைத் தமிழர் விடயத்தை கையாண்டது அமெரிக்கா . மனித உரிமைகள் பேரவை ஊடாக இலங்கையை பொறுப்புக்கூறச் செய்யமுடியாதது என்பது சுமந்திரனுக்கும் சம்பந்தனுக்கும் தெட்டத் தெளிவாகவே தெரியும். ஆனாலும் அமெரிக்காவின் தாளத்துக்கு ஆடவேண்டும் என்பதற்காக, தமிழர்களின் நீதி கோரிய பயணத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் முடக்கினர். பாதுகாப்புச்சபை ஊடாக இலங்கை தண்டிக்கப்படுவதை இலங்கையின் போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதை காப்பாற்றும் நகர்வை முன்னெடுத்து தமிழர்களுக்குத் துரோகமிழைத்தனர்.

இதன்பின்னர் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது மேற்குலகாலும், இந்தியாவாலும் களமிறக்கப்பட்ட மைத்திரிபாலவை நிபந்தனைகள் எதுவுமின்றி ஆதரித்தனர். நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டது. ஆனால் சிறிது காலத்திலேயே மைத்திரிபால தனது சுயரூபத்தைக் காண்பித்தார். புதிய அரசமைப்பு முயற்சியும் காணாமல்போனது. நீதிக்கான பயணமும் தமிழ்த் தலைவர்களான சம்பந்தன், சுமந்திரனாலேயே படுமோசமாகபுதைகுழிக்குள் வைத்து மூடப்பட்டது. 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவையும் சம்பந்தன் சுமந்திரன் இணையே எடுத்தது. இந்தத் தரப்புகளின் பின்னால் மேற்குலக சக்திகளும், இந்தியாவும் இருந்தன என்பது வெளிப்படை. தனது தேர்தல் அறிக்கையில், நல்லாட்சி காலத்தில் தொடங்கப்பட்ட புதிய அரசமைப்பின் அடிப்படையில் தீர்வு என்பதைச் சொல்லிவிட்டு தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், 13ஆவது திருத்தமே தீர்வு என்று சொல்லிவருகின்றார் சஜித். அப்படிப்பட்ட ஒருவருக்குத்தான் தமிழர்களை வாக்கிடச் சொல்லியிருந்தனர் சம்பந்தன் சுமந்திரன் இணை.

இதற்கிடையில் மஹிந்த ராஜபக்ச அழைத்தபோது பேச்சுக்கு சென்று விட்டு, ' ஏமாற்றிவிட்டார்' என ஒப்பாரி வைத்தார்கள். மைத்திரிபால காலத்தில் 'புதிய அரசமைப்பை உருவாக்குவதாகச் சொல்லி ஏமாற்றிவிட்டார்கள்' என்றார்கள். நல்லாட்சிக் காலத்தில் ஒட்டி உறவாடிய ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதும், புதிய அரசமைப்பை எல்லாம் தூக்கிக் கடாசிவிட்டு 'பொலிஸ் அதிகாரம் இல்லாத 13 'என்று சொல்லிய நிலையிலும் அவர் அழைத்த கூட்டங்களுக்கும் சென்றுவிட்டு 'ரணில் ஏமாற்றிவிட்டார்' என்று பொருமினார்கள்.

மக்களை வழிநடத்தும் தலைமைகள் என்போர் தூர நோக்கோடு, மக்கள் நலனை இதயசுத்தியாக மனதில் வைத்து தீர்மானங்களை எடுக்கவேண்டும். அப்படிப்பட்ட தலைமை தமிழ் மக்களுக்கு இருந்தது. தலைவர் பிரபாகரன் அப்படிப்பட்ட தூர நோக்கோடு தீர்மானங்களை எடுத்த ஒருவர். 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தமிழ் மக்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மனநிலையில் இருந்தனர். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவின் குணமறிந்து அவரால் தமிழினத்துக்கு எப்படி பாதிப்பு ஏற்படும் என்பதைக் கணித்து தேர்தல் புறக்கணிப்பை முடிவாக அறிவித்திருந்தார். அதுதான் தலைமைக்கு அழகு. அதைவிடுத்து அந்தக் களநிலைமைக்கு மாத்திரம், வேறொருவரின் தாளத்துக்கு ஆடிக்கொண்டு மக்கள் நலனைப் புறந்தள்ளி தீர்மானம் எடுப்பது தலைமைகளுக்கு அழகல்ல. இப்போதும் தமிழ்ப் பொதுவேட்பாளர் பற்றிய பேச்சுகள் எழுந்துள்ள நிலையில், வழமைபோன்று தீர்க்கதரிசனமற்ற தீர்மானத்தை நோக்கி தமிழரசுக் கட்சியை வழிப்படுத்தத் தொடங்கியிருக்கிறது சம்பந்தன் சுமந்திரன் இணை. இவர்களால் தமிழர்களுக்கு இதுவரை கிடைத்த விபரீதமான விளைவுகளை உணர்ந்து தமிழரசுக் கட்சி இனியாவது தன்னைத்திருத்திக் கொண்டு சரியான தீர்மானத்தை எடுக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ச. லூட்ஸ் நிலக்சிகா.
ஊடக கற்கைகள்துறை.
யாழ். பல்கலைக்கழகம்

# நாற்பது நாட்கள்



சஞ்சீவி சிறுகதை

வருஷம் ஆரம்பிச்சா ஜோன்சனுக்கு நல்லாத் தான் போய்க்கொண்டிருக்கும். ஆனா பங்குனி மாசத்தோடு பிரச்சினை ஆரம்பம் ஆகிவிடும். காரணம் 40 நாள்கள் தவக் கால விரதம் ஆரம்பித்து விடும். நாற்பது நாள்கள் வீட்டில் மச்ச வாடையே வராது.

ஜோன்சனை தவிரஅந்த வீட்டில் அனைவரும் பெண்கள். பூசைக்கு போறது, சிலுவைப்பாதைக்குப் போறது, கோயிலுக்குப் போறது, கல்வாரிக்குப் போவது என்று ஒரே அமர்க்களம் தான். ஆனால் ஜோன்சனுக்கோ ஒரே திண்டாட்டம் . ஏனென்றால் அசைவம் இல்லாமல் சாப்பாடு இறங்காது. சினிமாப் பாட்டிலில் கூட அசைவ உணவுகளின் பெயர்கள் வருவதை ஜோன்சன் மனைவியின் காதில் விழுந்தால் சரி

" என்னப்பா தவக்கால நேரத்தில் இப்பிடியே பாட்டு கேக்கிறது? " என்று ஆரம்பித்து விடுவாள்.

ஜோன்சனோடு சேர்த்து பாதிப்படைவது மூன்று ஜீவன்கள் மட்டுமே. ஒன்று "தம்பி", "பட்டு" என்று அழைக்கப்படும் இரண்டு நாய்களும் மற்றையது ஒரு பூனையும். காலை, மதியம், இரவு என உணவுக்காக காத்திருக்க.... சோற்றையும் பருப்புக்கறியையும் மரக்கறிகளையும் கலந்து தட்டில் போட்டால்... ஏமாற்றம்தான். ஜோன்சனின் மனைவியைப் பரிதாபமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு அப்பாலே அவை போய்விடுகின்றன.

பாவம் அவைகள் தான் என்ன செய்யும் ? ஊன் உண்ணும் விலங்குகளுக்கு விரதம், தவக்காலம் எனத் தெரியவா போகிறது. ஆனாலும் வயிற்றுப் பசிக்காக இவைகள் அக்கம் பக்கம் வீடுகளில் சென்று எப்போதாவது அசைவ உணவுகளை சாப்பிட்டுவிட்டு வருவதுமுண்டு. வீட்டில் உள்ளவர்கள் காணவா போகிறார்கள்? இவ்வாறு உணவு கிடைக்காமல் 'கடுப்பான' நேரங்களில் அவை மூன்றும் தமது வேலையைக் காட்டும். பூனை எலிப்பிள்ளையாரை விளையாட விட்டு பார்த்துக் கொண்டிருக்கும். பட்டுவும் தம்பியும் வீட்டுக்கு தெரியாதவர் வந்தாலும் சாட்டுக்கு ரண்டு மூண்டு குரைப்பு குரைத்துவிட்டு பேசாமல் படுத்துக் கொள்வார்கள்.

அந்த நாற்பது நாட்களை தவிர மற்றைய நாட்களில் எல்லாம் ஜோன்சனுக்கு கொண்டாட்டம் தான். மீன், நண்டு , இறால், கணவாய் என மண்சட்டியில குழம்பு கொதிக்கும். " அட அட என்ன வாசனை?" என்று தம்பியும் பட்டுவும் நினைத்துக் கொள்வார்கள் போலும்..

" எப்பதான் சாப்பாடு போடுவியள் எண்டு" வாலை ஆட்டியபடி பின்னாலே திரிவார்கள். பூனைப் பிள்ளையார் " மியாயாவ் மியாவ்" என்று மீசையை முறுக்கிக் கொண்டு காலில் உரசிக்கொண்டு திரிவார். ஜோன்சன் மத்தியான சாப்பாட்டுக்காக தவமாய் காத்திருப்பான். அசைவச் சாப்பாடு என்றால் போதும். சைனாக்காரன் இலங்கை மீது இப்போது காட்டும் ஈடுபாட்டைப்போல் கூடுதலாக இருக்கும்.

ஜோன்சன் குடும்பம் அவ்வளவு வசதியான சொத்துள்ள குடும்பம் இல்லை. தன்னால் முடிந்த அளவு ஒரு தொழில் செய்து குடும்பத்தைப் பார்ப்பதோடு இரண்டு பிள்ளைகளையும் படிக்க வைத்துக் கொண்டுதான் இருக்கிறான். ஒருநாளும் தன்னால் முடியாது எண்டு இருக்கமாட்டான். வீட்டில் நின்றாலும் ஏதாவது ஒன்றை செய்துகொண்டு என்னத்தை என்டாலும் போய் கொத்திக்கொண்டு தான் நிற்பான். அண்டைக்கும்-

"இஞ்சே ஒரு காக்கிலோ மீன் வேண்டி வாறன். எனக்கு மட்டும் ஒரு குழம்பு வச்சு தாறியே?"என்று கேட்டான்.

"திரும்பவும் சொல்றன் நாற்பது நாளைக்கு வீட்டுல மரக்கறிதான். ஒரே மீன் தானே சாப்பிடுறிங்கள்? ஒரு நாப்பது நாள் வாய் கட்ட ஏலாதா உங்களால? இப்ப மீன் விக்கிற விலைக்கு ..." என்று தொடங்கினாள் மனைவி. முன்புபோல் எடுத்ததற்கு எல்லாம் செலவு செய்வது இல்லை.சேர்த்து வைத்திருந்த சொத்துக்கள் கொஞ்சம் கொரோனா ஊரடங்கு காலத்தில் சாப்பிட்டுத் தீர்த்தாகி விட்டது. மிகுதி டொலர் பெறுமதி கூடுது குறையுதெண்டு சாமான்களின் விலையையும் கூட்டிப்போட்டாங்கள். அதுல மிச்சத்த அழிச்சாச்சு. இனி எண்டாலும் கொஞ்சம் செலவுகள் இறுக்கிப் பிடிக்க வேணும்.

ஜோன்சனுக்கு விளங்கியது.

ஆனாலும் முடியவில்லை.

கூட்டி கழித்துப் பார்த்தால் ஏனைய நாட்களை விட விரத நாட்களில் தான் சமையலுக்கு நிறையச் செலவு . ஏனெண்டால் மற்றைய நாட்களில் ஒரு மீன் கறியோட ஒரு மரக்கறி வெள்ளைக்கறி வைத்தால் போதும். ஆனால் இது இரண்டு மரக்கறிகளோடு சாப்பிடவும் முடியாது. கறி, வெள்ளைக்கறி, சுண்டல், பொரியல் என அனைத்து ரகங்களிலும் வேண்டும்.

காலங்காத்தால பிள்ளைகள பள்ளிக்கூடம் கூட்டிக்கொண்டு போய் விடுவதோடு ஜோன்சனின் அன்றைய நாள் ஆரம்பமாகிவிடும். அப்படியே மோட்டார் சைக்கிள் மன்னார் மீன் மார்க்கற்றுக்கு போகும். அப்போதுதான் வியாபாரிகள் மரக்கறி மூடைகளை இறக்கிக் கொண்டிருப்பார்கள். கீரைகள் விற்கும் பாட்டி மட்டும் தனது வீட்டோடு ஒரு சிறிய கடை வைத்திருப்பார். ஏனைய மரக்கறிக் கடைக்காரர்கள் எல்லாம் தம்புள்ளையில் இருந்து வாகனங்களில் கொண்டு வருவார்கள். அந்த நேரத்தில் மரக்கறிகளின் அழகைப் பார்க்க வேண்டுமே,. 'ச்சா... அவ்வளவு குளிர்ச்சியா இருக்கும்' மரக்கறி மூடையை அவிழ்த்துக் கொட்டியது தான் தாமதம் எங்கிருந்து வருவார்களோ தெரியாது,சிறு வியாபாரிகள், நுகர்வோர் என தேனீக்கள் போல மொய்த்து விடுவார்கள். அந்தக் கூட்டத்துக்குள் பூராவிட்டால் பார்த்து ஆசைப்பட்ட அந்த குளிர்ச்சியான மரக்கறிகள் கிடைக்காது.

ஜோன்சனும் ஒரு சிறு மரக்கறி வியாபாரிக் கணக்கா மரக்கறிகளை வாங்கிவிடுவார். ஒரு நாளைக்கு மூன்று நான்கு கறிகள் வைப்பதென்றால் அவ்வாறு தானே வேண்ட வேண்டும். மரக்கறிகளை வாங்கிக் கொண்டு நேரடியாக வீடு செல்வதற்கு மனது கேட்காது. ஏனென்றால் மரக்கறிக் கடைகளுக்கு முன்னால் தான் மீன் மார்க்கெட். மீன்களை வாங்காவிட்டாலும் ஒரு எட்டு மீன் சந்தைக்கு சென்று வந்தால் தான் ஜோன்சனின் மனதிற்கு நிம்மதியாக இருக்கும். ஆனால் அந்த நேரத்தில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றவர்கள் வந்திருக்கமாட்டார்கள். ஊர்களுக்கு மீன் எடுத்துச் சென்று விற்பனை செய்யும் சிறு வியாபாரிகள் தான் வந்திருப்பார்கள். அநேகமானோர் அதிகாலை 5 மணிக்கெல்லாம் வந்து நேரத்துக்கு பிடித்துவரும் மீன்களை எடுத்துச் சென்றிருப்பார்கள். பெரு வியாபாரிகள் வாடிக்கு வருவதற்கு சற்று நேரம் ஆகும். ஜோன்சன் பேபபா கடைகளுக்கு சென்று பேப்பரை எடுத்துக்கொண்டு வேண்ட வேண்டிய வேறு பொருட்களை வேண்டிக் கொண்டு வந்து மார்க்கெட்டுக்கு அருகில் உள்ள கடையில் வேலை செய்பவர்களுடன் பேசிக் கொண்டிருப்பான். அதுவும் மீன், நண்டு, இறால், கணவாய், பற்றிய கதைகள் தான் .

" இந்த ஊருக்க கொண்டு வந்து மீன் விக்கிறாங்க தானே. அவங்கட்ட எல்லாம் நான் மீன் எடுக்கிற குறைவு. விடிய மோட்டார் சைக்கிள எடுத்தா மன்னார் மீன் மார்க்கற்றுக்கு இல்லாட்டி மீன்வாடிக்கு போய் மீன் எடுத்துட்டு போய்றது. இவங்கள் இங்க எடுத்திட்டு ஊருக்கு கொண்டாந்து கொள்ளை விலை சொல்லுவாங்க. வாடில போய் ஒரு கிலோ மீன் எடுத்தால் இரண்டு மூன்று நாட்களுக்கு வைத்து சமாளிப்பதற்கு போதுமானதாக இருக்கும்" இவ்வாறு பேசிக் கொண்டு இருக்கும் போது கடலுக்கு சென்ற மீனவர்கள் மீன்களைக் கொண்டுவந்து, வாடிகளில் கொட்டி மீன்கள், நண்டுகள் என ஒவ்வொரு இனத்தையும் தனித்தனியாக உடன்மீன் ,ஐஸ்மீன் என தரம் பிரித்து வைத்து வியாபாரத்தை ஆரம்பித்துவிடுவார்கள்.

மீன்களின் இனங்கள் அவற்றின் பெயர்களைப் பற்றியும் எந்த மீன் எவ்வாறான ருசி என்பதை பற்றியும் ஜோன்சனிடம் தான் கேட்டுத்தெரிந்து கொள்ள வேண்டும் . அப்பிடி ஒரு மீன் பைத்தியம் என்று சொல்லலாம். "சரி ஒருக்கா போய் மீன்கள பார்த்துட்டு வருவோம். "என்று ஜோன்சன் வெளிக்கிட்டான்.

" ஜோன்சண்ணே வீட்டுல மரக்கறிதானே பிறகேன் மீன் சந்தைக்கு போறீங்க?"

" வாங்கிறதுக்கு இல்லடாப்பா. சும்மா ஒரு எட்டு போய் பாத்திட்டு வீட்ட போவோம். நான் வாறன்டா தம்பி" என்று கூறிக்கொண்டு மீன்வாடிக்குள் ஜோன்சன் நுழைந்தான். அங்கே ஒரே வரவேற்பு தான். ஏனென்றால் வாடிக்கையாக அங்கு வந்துசெல்வதால் மீன் வியாபாரிகளுக்கு ஜோன்சனை நன்றாகத் தெரியும்.

" அம்மா வாங்க, ஐயா வாங்க! உடன் பாரை , கலிங்க முரல், சீலா , விளைமீன் இருக்கு. நண்டு இருக்கு, இறால் இருக்கு . அம்மா வாங்க என்ன தர? " சந்தையில் கத்தலும் கூப்பாடும் ஆரம்பித்தது. மீன் வியாபாரிகள் அனைவரும் சேர்ந்து கோஷ்டி கானம் பாடுவார்கள்.

" ஜோன்சண்ணே இஞ்ச வாங்கோ. நல்ல உடன் மீனுகள் கிடக்கு பாக்கலாம்"

ஜோன்சன் மற்றவர்களைப் போல் விலை குறைப்பதோ அல்லது பேரம் பேசுவதோ இல்லை. நேர்மையாக தன்ர வயிற்றுக்கும் வியாபாரியின்ர வயிற்றுக்கும் அடிபடாமல் மீன் வாங்கும் மனுஷன் . ஜோன்சனுக்கு மீன் பிடித்திருந்தால் அது எவ்வளவு விலை ஆனாலும் பொக்கெட்டில் இருந்து காசை உருவி நீட்டி விடுவான். . அந்த விலையானது பச்சை நோட்டுக் கொள்ளும் அடங்கும் அல்லது மேலேயும் பாயும். மனைவியை வேலைக்கு விடுவதற்கு கூட்டி செல்லும்போது மீன் சந்தையில் தெரிந்தவர்கள் யாராவது ஜோன்சனைக் கண்டால்

"என்னண்ணை மீன் வேண்டேலையோ? அண்ணை எப்பவும் பச்ச தாளுக்கு மேல தான் மீன் வாங்குவார்." என்று கொளுத்திப் போட்டுவிட்டு சென்று விடுவார்கள். மனைவி வேலைக்குச் செல்வது என்பதால் வழமையாக மீன் வாங்கிய கையோடு மீன் வெட்டுமிடத்துக்கு விரைந்து சென்று 50 ரூபா கொடுத்து மீனை துண்டுகளாக வெட்டிக் கொண்டு தான் வீடு செல்வார்.

(05 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.



**மாணவர்களே!**

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555


தி.அக்ஷயன்
தரம் - 3B,
யா/இந்து ஆரம்பப் பாடசாலை.



றொ.சஸ்வின்
தரம் - 8D
யா/பரியோவான் கல்லூரி



ஆர்.மித்ரா
தரம் - 2C
யா/ சுண்டுக்குழி மகளிர் கல்லூரி.





ம.லக்ஷிதா
தரம் - 3A
யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்



கே.பிரவீனா
தரம் - 9
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

# நாற்பது....

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு இருக்கும் மனுசனை 40 நாள்கள் மீன் சாப்பிடக் கூடாது என்றால் எப்படி ? எவ்வளவு கஷ்டமாக இருக்கும். சில வேளைகளில் மனைவி இல்லாத நேரங்களில் திருட்டுத் தனமாக கருவாடு சுட்டுச் சாப்பிடத் தோன்றும். ஆனால் மனச்சாட்சி இடம் கொடுக்காது. இவ்வாறு ஆசையை அடக்கி கொண்டு நாற்பதாவது நாளுக்காக தவமாய் தவமிருந்து காத்துக் கொண்டு இருந்தான் ஜோன்சன்.

விரதம் முடிந்துவிட்டது.

இருப்பினும் ஜோன்சனின் மனம் ஊசலாடியது. காரணம் வறுமை என்பவன் தலைக்கு மேல் நின்று டப்பாங்குத்து ஆடிக்கொண்டிருந்தான். தனக்கும் வேலை குறைவு. பிள்ளைகளின் படிப்புச் செலவையும் பார்க்கவேண்டும். வீட்டுச் செலவையும் பார்க்கவேண்டும். மனைவி வேறு அடிக்கடி செலவைக் குறைக்கவேண்டும் என்று சொல்வது காதில் ஒலித்தது. ஒரு முடிவுக்கு வந்தான் ஜோன்சன். இருப்பதை உண்டு விட்டு செலவுகளைக் குறைக்கவேண்டும் . இதுதான் அந்த முடிவு.

மனைவி ஜோன்சனின் குரலுக்காக காத்திருந்தாள். ஆனால் அவன் மௌனமா இருப்பது வித்தியாசமாக இருந்தது.

" ஏனப்பா மீன் வாங்கலையோ?"

" வாங்க வேணுமோ?"


" என்ன புதுசா தெரியாத மாதிரிக் கேக்கிறிங்கள்? போய் வாங்கிட்டு வாங்கப்பா. சமைக்கலாம். அவங்க சொல்ற விலைக்கு வேண்டாம கொஞ்சம் குறைச்சு வேண்டி வாங்கோ"

மார்க்கெட் சென்ற ஜோன்சனுக்கு மனசு கேட்கவில்லை. மரக்கறிகளை வாங்கிக் கொண்டு மீன் மார்க்கெட் போகாமல் நேரே வந்து மோட்டார் சைக்கிளில் ஏறி ஸ்ராட் பண்ணினார். மீனுக்காக அனுப்பி வைத்த அந்த ஜீவன்களின் முகங்கள் கண் முன் நிழலாடின.

'எவ்வளவு எதிர்பார்ப்புடன் என்னை வழி அனுப்பி வைத்தார்கள். இப்போதும் எதிர்பார்ப்போடு காத்திருப்பார்கள். அவர்களுக்கு அந்த ஏமாற்றத்தை கொடுக்கக்கூடாது'

மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு மீண்டும் மீன் மார்க்கெட்டுக்குச் சென்றார்.

" தம்பி அந்த பாரை மீனில ஒரு கிலோ போடுப்பா,.... வீட்டில் பார்த்துகொண்டு இருக்குங்கள்"



## விடுகதைகள்

01. விரல் இல்லாமலே ஒரு கை அது என்ன?

02. கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும்தான்?

03. வயதான பலருக்கு புதிதாக ஒரு கை அது என்ன?

04. அம்மா படுத்திருக்க மகள் ஓடித்திரிவாள் அது என்ன?

05. மழை காலத்தில் குடை பிடிப்பான் அவன் யார் ?

**விடைகள்: 01. உலக்கை, 02. வெங்காயம், 03. வழுக்கை, 04.அம்மி குளவி, 05. காளான்**



# இராவணன்

சிவபக்தியில் இராவணனை மிஞ்சியவர்கள் எவருமில்லை. நான்கு வேதங்கள், ஆயகலைகள் என அனைத்தும் கற்றறிந்தவர் இராவணன். இலங்கையை ஆட்சிசெய்த தமிழ் அரசரும் இராவண காவியத்தின் காப்பியத் தலைவனும் ஆவார்.

இராவணன், தசக்கிரீவன், இலங்கேஸ்வரன், இராவணேஸ்வரன், திரிலோக அதிபதி என்று பலபெயர்களால் இராவணன் அழைக்கப் பெறுகிறான்.


சிவனுடைய பக்தனாக திருநீறு அணிபவன் என்றும் சீதையைக் கவர்ந்து சென்றதனால் இராமனுடன் போரிட்டு இராவணன் வீரமரணம் அடைந்ததாகவும் இராமாயண காவியம் கூறுகிறது.

இராவணன் சாம வேதத்தில் நிபுணத்துவம் பெற்றவன். இவன் தனது கை நரம்புகளால் சாமகானம் பாடி சிவனை மகிழ்வித்ததாகவும் இராமாயணம் கூறுகின்றது. இராவணனுடைய ஆட்சியின் போது இலங்கை வளமாகக் காணப்பட்டதாகவும், இராவணன் விமானம் ஒன்றை வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. இராவணன் பத்துத் தலை கொண்டவராக வர்ணிக்கப்படுகிறார்.

இராவணனின் மனைவி மண்டோதரி. பேரழகு படைத்தவள். இலங்கைக்குச் சென்ற அனுமன், முதலில் இவளைப்பார்த்து சீதை என்றே நினைத்து விடுகிறார். இந்திரசித்தன் இராவணனது மகன். இராவணனின் ஆட்சியில் இலங்கை பொன்னிலங்கையாக விளங்கியது. மக்கள் அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்தனர். இலங்கையை பூலோக சொர்க்கம் என்று கூறும் அளவுக்கு அதன் வனப்பு மூவுலகையும் ஆச்சரியப்பட வைத்தது. ஆனால் அவை அனைத்தும் இராவணனின் ஆணவத்தாலும், சுயநலத்தாலும் அழிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகத்துறை மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புகள்



**தொகுப்பு:**
*முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

திரைகடலோடியும் திரவியம் தேடு என்ற ஔவையின் வாக்குக்கு அன்றும் இன்றும் செயல் வடிவம் வழங்கும் முக்கியமான துறையே வர்த்தகம் ஆகும். காற்றுப்புக முடியாத இடங்களிலும் புகுந்து தன்னை நிலை நிறுத்தும் ஆற்றல் வர்த்தகத்துக்கு உள்ளது என்பர். மனிதனது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றும் பொருட்டு பொருள்கள் மற்றும் சேவைகளைப் பரிமாற்றம் செய்வதனுடன் தொடர்புடைய அனைத்துச் செயற்பாடுகளையும் உள்ளடக்கியதே வணிகம் ஆகும். இன்றைய அனைத்துப் பொருளாதாரங்களிலும் இன்றியமையாதவொரு துறையாக இது விளங்குகின்றது.

இந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் வெள்ளிவிழா செயற்பாடுகளின் ஓர் அங்கமாக மாணவர்களிடையே வர்த்தகத்துறை தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதனை நோக்கமாகக்கொண்டு இக்கட்டுரையானது வெளிவருகின்றது. வர்த்தகத்துறை சார் மாணவர்கள் அதிகளவிலான பல்கலைக்கழகங்கள் சார் உயர் கல்வி வாய்ப்புகளைக் கொண்டுள்ளனர். ஆயினும் மாணவர்கள் மத்தியில் இதுதொடர்பான போதிய விழிப்புணர்வு இல்லாதிருப்பது துரதிர்ஷ்டவசமானதாகும். இதே போன்று இத்துறைசார் மாணவர்கள் சிறந்த தொழில் வாய்ப்புகளையும் கொண்டுள்ளனர் என்பது குறிப்பி டத்தக்கது.

இக்கட்டுரையானது வர்த்தகத்துறை சார் மாணவர்களுக்கான பல்கலைக்கழகங்கள் சார் உள் வாரியான (itnernal) கற்கை வாய்ப்புகள், பல்கலைக்கழகங்கள் சார் வெளிவாரி ரீதியான (external) கற்கை வாய்ப்புகள் மற்றும் தொழில்சார் (professional) கற்கை வாய்ப்புகள் என்பன பற்றிய விவரங்களையும், வர்த்தகத்துறைசார் மாணவர்களுக்கான எதிர்கால தொழில் வாய்ப்புகள் பற்றிய தகவல்களையும் வழங்குகின்றது.

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழான பல்கலைக்கழகங்களில் உள்வாரியான (itnernal) பட்டப்படிப்புகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக அனுமதி நடைமுறைகளின் கீழான பல்கலைக்கழகங்கள்சார் உள்வாரியான (itnernal) முழு நேர அடிப்படையிலான பின்வரும் கற்கை நெறிகள் வர்த்தகத் துறை சார் மாணவர்களுக்கான வாய்ப்புகளாக விளங்குகின்றன.

### முகாமைத்துவம் மற்றும் வணிகம் சார்ந்த பிரதானமான கற்கைநெறிகள்

பாரம்பரியமான வணிகம் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் தொடக்கம் ஆதன முகாமைத்துவம் மற்றும் வங்கியியல் போன்ற சிறப்புத் துறைகள் வரை இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் சிறந்த கல்வி வாய்ப்புகளை வழங்குகின்றன.

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம், ருகுணப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ரஜரட்ட பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம் மற்றும் வயம்ப பல்கலைக்கழகம் என்பன முகாமைத்துவம் (Management), வணிகவியல் (Commerce), முகாமைத்துவம் (பொது) சிறப்புப் பட்டத்தையும் (Management (Pubilc) Honours), ஆதன முகாமைத்துவம் மற்றும் மதிப்பிடல் (Real Estate Management and Valuation) போன்ற கற்கைநெறிகளை வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு பிரத்தியேகமாக வழங்குகின்றன. வர்த்தகத்துறை மாணவர்களுக்கான பிரத்தியேகமான கற்கைநெறிகளுக்கு அப்பால் ஏனைய துறை மாணவர்களும் கற்கக் கூடிய வகையில் வவுனியா பல்கலைக்கழகம் மற்றும் திருகோணமலை வளாகம் என்பவற்றினால் முகாமைத்துவக் கற்கைகள் கற்கை நெறி (TV) (Management Studies (TV) வழங்கப்படுகின்றது. இங்கு வவுனியா பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களில் 60 வீதமானவர்களும் திருகோணமலை வளாகத்துக்குத் தெரிவு செய்யப்படுபவர்களில் 40 வீதமானவர்களும் வர்த்தகத் துறையிலி ருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய பாரம்பரிய கற்கைகளுக்கு அப்பால், இலங்கைப் பல்கலைக்கழகங்கள் தொழில்துறைசார் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பிரத்தியேகமான கற்கைநெறிகளை வழங்குவதில் சிறந்து விளங்குகின்றன. அந்த வகையில் வர்த்தகத்துறை மாணவர்களுக்காக ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழகத்தினால் வியாபார தகவல் முறைமைகள் (சிறப்பு) பட்டமும் (Busienss Information Systems (Honours), களனிப் பல்கலைக்கழகத்தினால் கணக்கியல் தகவல் முறைமைகள் வணிக முகாமைத்துவ பட்டமும் (Accountign Information Systems), வவுனியாப் பல்கலைக்கழகத்தினால் வங்கியியல் மற்றும் காப்புறுதி வியாபார முகாமைத்துவ சிறப்புப் பட்டமும் (Bankign and Insurnace) வழங்கப்படுகின்றன.

இந்த மதிப்புமிக்க கற்கை நெறிகளில் அனுமதியினைப் பெறுவதற்கு, மாணவர்கள் குறிப்பிட்ட தகுதி அளவுகோல்களை பூர்த்தி செய்யவேண்டும். பொதுவாக, விண்ணப்பதாரர்கள் க.பொ.த. உயர்தரத்தில் வணிகக் கற்கைகள், பொருளியல் மற்றும் கணக்கியல் ஆகிய பாடங்களில் ஆகக்குறைந்தது 'S' சித்தியைப் பெற்றிருக்கவேண்டும். இருப்பினும் குறித்த சில கற்கைநெறிகளுக்கு கூடுதல் பாடத்தேவைகள் அல்லது வேறு முன்நிபந்தனைகள் உண்டு என்பதையும் கவனத்தில் கொள்ளல்வேண்டும்.

### வர்த்தகத்துறை மாணவர்களும் கற்கக்கூடிய ஏனைய கற்கைநெறிகள்

இதுவரை மேலே குறிப்பிடப்பட்ட கற்கைநெறிகள் வர்த்தகத்துறை மாணவர்களுக்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட கற்கைநெறிகளாகும். இவற்றுக்கு மேலதிகமாக க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவு பாடங்களுக்குத் தோற்றிய மாணவர்கள் பின்வரும் கற்கைநெறிகளுக்கும் அனுமதி கோர முடியும். ஆயினும் அவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வருடாவருடம் வெளியிடப்படும் அனுமதிக் கையேட்டில் குறிப்பிடப்படும் குறித்த கற்கை நெறிகளுக்காகக் கோரப்படும் மேலதிக அனுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அவ்வாறான கற்கைநெறிகள்: வசதிகள் முகாமைத்துவம் (Facilities Management) மொரட்டுவப் பல்கலைக்கழகம், விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் (Hospitality, Tourism and Events Management ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், உடற்றொழில் கல்வி (Phyiscal Education) சப்ரகமுவப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் (Sports Science & Management) சப்ரகமுவப் பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் (Information Technology & Management) மொறட்டுவப் பல்கலைக்கழகம், தகவல் முறைமைகள் விஞ்ஞான இளமாணிப் பட்டம் (Information Systems) கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்லூரி (UCSC), ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம் மற்றும் சப்ரகமுவப் பல்கலைக்கழகம், திரைப்படம், தொலைக்காட்சி கற்கைகள் (Film & Television Studies) களனிப் பல்கலைக்கழகம், செயற்றிட்ட முகாமைத்துவம் (Project Management) வவுனியாப் பல்கலைக்கழகம், தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் (Information and Commniucation Technology (ICT) ரஜரட்ட பல்கலைக்கழகம் மற்றும் வவுனியாப் பல்கலைக்கழகம், உணவு வணிக முகாமைத்துவம் (Food Busienss Management) சப்ரகமுவப் பல்கலைக்கழகம், வியாபார விஞ்ஞானம் (Busienss Science) மொரட்டுவப் பல்கலைக்கழகம், நிதிப் பொறியியல் (Fianncial Engienerign) களனிப் பல்கலைக்கழகம், மனித வள மேம்பாடு (Humna Resource Development) ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், சுகாதார சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் (Health Tourism and Hospitality Manage ment) கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், யோகா மற்றும் மனநிகழ்வுகளின் ஆய்வு (Yoga and Parapsychology) கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், சுதேச அறிவியல் மீதான சமூகக்கல்வி (Social Studies in Indigenous Knowledge) கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், நிதிப் பொருளியல் (Fianncial Econolcs) ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம், ஆங்கில மொழி மற்றும் பிரயோக மொழியியல் (English Language & Applied Lignuisitcs) ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், ஆக்கத்திறன் இசை தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித்திறன் (Creaitve Muisc Technology and Produ ction), ஸ்ரீ ஜயவர்த்தன புரப் பல்கலைக்கழகம், நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் (Fashion Design & Product Development) மொறட்டுவப் பல்கலைக் கழகம், கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் (Industrial Information Technology), ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் ஆகியவை வழங்குகின்றன.

*(மிகுதி அடுத்த வாரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவின் வலியை மொழிதல்



○ கோகுலராகவன்

ஆதர் வலி (Arthur waley 1889 1969) ஒரு பிரித்தானிய மொழி பெயர்ப்பாளர்.

பல சீன, ஜப்பானிய இலக்கிய வடிவங்களான கவிதை, நாவல், கட்டுரைகளை ஆங்கிலமொழிக்கு கொண்டு வந்ததில் ஆதர் வலிக்கு பெரும் பங்குண்டு.

ஆதர் வலி 170 சீனக்கவிதைகள் (The hundred and seventy Chinese poems) என்ற சீனக் கவிதைகளின் தொகுப்பை முதன்முதலில் ஆங்கில மொழிக்கு மாற்றி வெளியிட்டார்.

இதில் பல பழைய, புதிய சீனக்கவிதைகள் அடங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சீனாவின் எட்டாம் நூற்றாண்டின் சிறந்த கவிஞரான 'போ சூ 1' (Po chu 1) கவிதைகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

' போ சூ 1 ' சீனாவில் இன்று வரை கொண்டாப்படும் புராண காலக் கவிஞர்.

ஆதர் வலி இதைத் தொடர்ந்து ஜப்பானிய மொழிக் கவிதைகளை 'த உடா '( The Uta) என்றதலைப்பில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

இதனைத் தொடர்ந்து 'த டேல் ஒவ் ஜெஞ்சி' (The tale of Genji ) என்ற ஜப்பானியக் கதை வடிவத்தை ஆங்கிலமொழியில் கொண்டு வந்தார்.

இது 11 ஆம் நூற்றாண்டில் ஜப்பானிய இளவரசராக இருந்த ஹிகாரு ஜெஞ்சி (Hikaru Genji) என்பவரது வரலாற்றைக் கூறும் புதினம். இது பாடலும்,கதையும் கலந்து சொல்லப்பட்ட நாவல் வடிவமாகவே கருதப்படுகிறது.

இத்தனைக்கும் ஆதர் வலி மாண்டரினை அல்லது ஜப்பானிய மொழியை முறையாகக் கற்றவர் அல்ல.

இதனால்தான் 'கொன்பூசியஸிடம் சீன மொழியைக் கற்றுக்கொள்வோம்' (Learning Chinese from Connfucius) என்ற புத்தகத்தை வெளியிட்டாரோ தெரியவில்லை.ஆனால் ஆதர் வலி இதற்கான வாய்ப்பாக அவர் பிரிட்டிஸ் ஆவண காப்பகத்தில் வேலை பார்க்கும் போது அங்கிருந்த சீன,ஜப்பானிய நூல்களை சுயமாக வாசிக்க கற்றுகொண்டதே காரணமாகிறது.அந்த நூல்களில் காணப்பட்ட சித்திரங்களும் இதற்கு உதவியாக அமைந்தன. ஆதர் வலி சீனாவுக்கோ, ஜப்பானுக்கோ தன் வாழ்நாளில் ஒருபோதும் பயணம் செய்ததும் கிடையாது.

ஆதர் வலி செய்த இந்த இலக்கிய பணியால் சீன, ஜப்பான் இலக்கிய வடிவங்கள் உலகுக்கு கிடைத்தன என்பது பெரும் கைங்கரியம் ஆகும்.

ஆதர் வலி மொழி பெயர்த்த பழைய கவிதை (Old Poem) என்ற கவிதையை தமிழில் தருகிறேன் . இது ஒரு சீனக்கவிதைதான்.

இதனுடைய மூல எழுத்தாளர் யார் என்ற தகவலைப் பெறமுடியவில்லை.

ஆதர் வலி இதற்கான பதிவை இடவில்லை.காரணம் அவரும் இதனை அறியாதிருந்திருக்கலாம்.

## இருந்து கதைப்பம்



### பழைய கவிதை

பதினைந்து வயதில்
போர்ப்படையில் இணைந்தேன்.
எண்பது வயதில் வீடு திரும்பினேன்.
வரும் வழியில்
எனது ஊர்க்காரனைக் கண்டேன்.
"யார் எனது வீட்டில் இருக்கிறார்கள் ?"
"அங்கே யாருமே இல்லை
"உன் வீட்டைச் சுற்றி
பற்றையும் ,காடும் மண்டிக்கிடக்கிறது. "

காட்டு முயல்கள்
நாயின் கிடங்குகளில் ஓடித்திரிந்தன.
காட்டுக்கோழி
வீட்டின் முகட்டில் இருந்துவிட்டு
கீழே பறந்தது.
கொல்லைப்புறம் காட்டுப்புல்லு
வளர்ந்து கிடந்தது.
கிணற்றடியை சுற்றி துத்திச் செடி
புத்து மூடித் தெரிந்தது.
நான் காட்டுத் தானியங்களை பறித்து
கஞ்சி காய்ச்சினேன் .
துத்தி பூக்களை பறித்து சூப் வைத்தேன்.
இரண்டும் சமைத்தாயிற்று.
என்னுடன் சேர்ந்து சாப்பிட
யாருமே இல்லை.
வெளியே சென்று
கிழக்குத் திசையை வெறித்துப்
பார்த்தேன்.
என்னை அறியாமல்
கண்ணீர் வழிந்து
என் உடைகளை ஈரமாக்குகின்றது.

பிரிவின் வலியை சொல்ல இதைவிட
கவிதை தேவையா?.


## பாகம் 2

○ இராகவன்



# ஊர்ப்புதினம்

போனகிழமை ஊர்ப்புதினத்தின் தீவிர வாசகரொருவரைப் பற்றிப் பாத்தனாங்கள். இந்தக் கிழமை இன்னொரு முக்கியமான தீவிர வாசகரைப் பற்றிப் பாப்பம். இவரைப் பற்றி ஊர்ப்புதினம் முதலாம் பாகத்தில கொஞ்சம் சொல்லியிருக்கிறன். இவர் பிறந்தது வளர்ந்ததெல்லாம் கரவெட்டிதான். முழுப் பெயர் பாலசுப்பிரமணியம். நாங்கள் 'பாலண்ணை' எண்டு கூப்பிடுவம். இப்ப கொடிகாமத்திலயிருக்கிறார். இவரின்ரை மனிசிக்காரி சித்திரா அக்கா. இரண்டு பேரும் ரீச்சராயிருந்து ரிற்றயர் பண்ணிட்டினம். மூத்த மகன் கபிலன், தொல்லியல் திணைக்களத்தில முக்கியமான பொறுப்பிலயிருக்கிறார். யாழ்ப்பாணக் கோட்டை இவரின்ரை பொறுப்பிலதானிருக்கு. இவருக்கு அடுத்ததா சந்தியா, செந்திரு எண்டு இரண்டு பொம்பிளைப் பிள்ளையள். பாலண்ணை அப்பவே ஒரு தீவிரவாசகர். எங்கடை 'இங்கிருந்து...' பன்னிரண்டு சிறுகதைகள் தொகுப்பிலயிருக்கிற என்ர கதையை வாசிச்சுப்போட்டு 'எஸ். பொ. வின்ர ஸ்ரையில்ல எழுதியிருக்கிறீர்' எண்டு சொன்னவர். யாழ்.இந்துக் கல்லூரியில அந்தப் புத்தக வெளியீட்டு விழா நடந்த நேரம் எனக்காகக் கொடிகாமத்திலயிருந்து மினக்கெட்டு வந்தவர். எங்கட பேராசிரியர் சிவலிங்கராஜாவின்ர ஒண்டவிட்ட தம்பி. நான் ஊர்ப்புதினம் எழுதத் தொடங்கினாப் போல ஆளை ஒருநாளும் நேரில சந்திக்கேல்ல. மகன் கபிலனை இடைக்கிடை சந்திக்கேக்குள்ள "அப்பா உங்கடை ஊர்ப்புதினத்தைத்தான் பேப்பர் எடுத்தோண்ண முதன்முதலா வாசிக்கிறவர். எல்லாத்தையும் கட்பண்ணிப் பத்திரமா வைச்சிருக்கிறார்" எண்டு சொல்லுவார்.



41

எதிர்பாராத விதமாய் இப்ப ஒரு கிழமைக்கு முன்னம் நான் காலமை ஓபீசுக்கெண்டு வெளிக்கிட்டுக் கலிகைச் சந்தியில வந்து மிதக்க, கொடிகாம பஸ் வந்து நிண்டுது. அதிலையிருந்து ஒராள் இறங்கிச்சுது. ஆரெண்டு பாத்தால் எங்கட பாலண்ணை. பக்கத்தில கொண்டுபோய், மோட்டச் சைக்கிளை நிப்பாட்டினன். நிமிர்ந்து பாத்திட்டு "எட தம்பி நீயா?" எண்டு புளுகத்தோட ஆச்சரியப்பட்டார். "எங்கை இஞ்சால பக்கம்?" எண்டு கேட்டன். "பாண்டியர் வீட்டுப் பொன்னற்ற மனிசி காலமாகிட்டா. அதான் போறன்" எண்டார்.


"சரி ஏறுங்கோ! கொண்டே விடுறன்" எண்டு ஏத்தினன். அவர் ஏறினதிலயிருந்து ஊர்ப்புதினத்தைப் பற்றி புகழத் தொடங்கினார். "தம்பி நீர் ஊர்ப்புதினத்தில எழுதின பீத்தல் சைக்கிள் நவரத்தினமும் நானும் விக்கினேஸ்வராவில ஒண்டாப் படிச்சனாங்கள். ஆள் அப்பவே அந்த மாதிரிப் பாடுவான். மற்றது நீர் எழுதித்தான் நவமும் செல்வமும் இரணைப் பொடியள் எண்டு எனக்குத் தெரிஞ்சுது" எண்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரைசியின் மறைவு



## அரசியல் மாற்றமா?

ஈரானின் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்ததையடுத்து, உலகின் அரசியல் ஓட்டம் புதியதொரு பாதையில் பயணப்படுமா? என்ற கேள்வி மிகையாகவே எழுந்திருக்கின்றது. ஏனெனில் ஈரான் இன்று இழந்திருப்பது ஒரு ஜனாதிபதியை அல்ல, மாறாக ஒரு யுக புருஷனை.

1948 ஆம் ஆண்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இஸ்ரேலுக்கும், 2018 ஆம் ஆண்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இஸ்ரேலுக்கும் இடையில் காணப்படும் வேறுபாடுகள் இமாலய மானவை. கறையான்கள் புற்றெடுத்து பச்சை மரத்தையே மெல்ல ஆட்கொள்வது போன்றுதான் பலஸ்தீனத்தை இஸ்ரேல் இந்த 70 ஆண்டுகால இடைவெளியில் ஆக்கிரமித்தது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிரான பலஸ்தீனர்களின் போராட்டம் சமபலத்துடன் நிகழ்த்தப்படும் ஒன்றல்ல. 'யூதர்களின் பாஷையில்' சொல்வதானால், இதுவும் ஒருவகையில் 'கோலியாத்தை எதிர்த்த தாவீதின் கதைதான்'. இங்கே பலஸ்தீனத்தின் நிலமீட்புக்குப் பலமூட்டியதும், உரமூட்டியதும்தான் ரைசியின் முதல் வெற்றி.

ரைசி ஈரானின் முக்கியமான போர்த்தந்திரியாகவும், கொள்கை வகுப்பாளராகவும், இறுதியாக ஜனாதிபதியாகவும் இருந்த காலத்தில் ஹமாஸிடம் குவிந்திருந்த ஆயுதங்கள் ஏராளம். இதை தூதரகப் பிரச்சினைகள் காரணமாக ஈரான் பலமுறை மறுத்தாலும், தற்போது ஹமாஸே அதைப் பகிரங்கமாக அறிவிக்கவும் செய்திருக்கின்றது. அல்லாமலும், இஸ்ரேலுக்கு எதிரான பூகோள வியூகங்களை வகுத்ததிலும், மத்திய கிழக்கின் அரசியலைத் தீர்மானித்துக் கொண்டிருந்ததிலும் ரைசியின் பங்கு மிகப்பெரியது. கடந்த மூன்று வருடங்களாக நடைமுறையில் இருந்த பொருளாதாரத் தடைகளையும்தாண்டி ரஷ்யாவுக்கு ஆயிரக்கணக்கான ஆளில்லா விமானங்களை ஈரானால் வழங்க முடிந்திருக்கின்றது என்றால், அதன் பின்னணியில் உள்ள பெரும் சக்திகளில் ரைசியும் ஒருவர்.



ஆனால், ஈரானில் அந்த நாட்டு ஜனாதிபதி சர்வ அதிகாரமும் படைத்த நபர் அல்லர் என்ற தெளிவையும் பொதுப் புரிதலையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். 'இஸ்லாமியக் குடியரசின் பெருந்தலைவர்' என்று அறியப்படும், அயத்துல்லா அல் கொமெனிதான் ஈரானின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஆற்றல் கொண்ட ஆன்மிகத் தலைவர், அவர் எடுப்பதுதான் தீர்மானம், அவர் வைப்பது கட்டளை, அந்தக்கட்டளைதான் சாசனம். அந்தக்கட்டளைகளுக்கும், தீர்மானங்களுக்குமான நிறைவேற்றதிகார முகம்தான் ரைசி போன்றவர்களுக்கு வழங்கப்படுகின்றதே அன்றி, அந்தத் தீர்மானங்களின் பிறப்பிடம் அவர்கள் அல்லர். ஆதலால், ஈரானின் கொள்கைகளில் அதன் செல்நெறிகளில் பெரியதொரு மாற்றத்தை உலகம் எதிர்பார்க்கவோ அல்லது அத்தகைய மாற்றம் நிகழ்ந்துவிடவோ வாய்ப்பில்லை.

விட்ட இடத்திலிருந்து தொடங்கும் கதையாக, இஸ்ரேல் என்ற நாட்டை மத்திய கிழக்கில் இருந்து அழித்துவிடுவது என்ற கொள்கையை தீர்மானத்தை ஈரானிய நாடாளுமன்றத்துக்குக் கொண்டுசெல்வதில் பிரதான நபராகச் செயற்பட்ட மொஹமட் மொக்பரை ஈரானின் புதிய ஜனாதிபதியாக (இடைக்கால ஜனாதிபதியாக) அறிவித்திருக்கின்றார் அயத்துல்லா அல் கொமேனி. ஆக, ஈரானின் இரும்புத்திரை இன்னும் இளகாதிருக்கப்போவதைத்தான் இந்த நியமனம் எண்பிக்கவும் செய்திருக்கின்றது.

# தமிழ்ப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாரா? மூன்றாவது அநுரகுமார. அவர் தமிழ் மக்களுக்கு என்ன தீர்வு என்பதை இதுவரை துலக்கமான வார்த்தைகளில் தெரிவிக்கவில்லை. எனவே மேற்சொன்ன மூன்று வேட்பாளர்களில் யாருமே தமிழ்மக்களோடு மூன்றாவது தரப்பு ஒன்றின் மேற்பார்வையின் கீழ் உடன்பாட்டுக்கு வரத் தயாராக இருக்கப்போவதில்லை. இப்படிப்பட்டதோர் பின்னணியில் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவரோடு ஏதோ ஓர் உடன்பாட்டுக்கு வரலாம் என்று கருதும் தரப்புகள் தமிழ்மக்களுக்குப் பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்தவேண்டும்.

தென்னிலங்கையில் உள்ள எந்த ஒரு பிரதான வேட்பாளராவது தமிழ் மக்களோடு மூன்றாவது தரப்பு ஒன்றின் கண்காணிப்பின் கீழ் உடன்பாட்டுக்கு வரத் தயாராக இருக்கிறாரா? அது ஒஸ்லோ ஆவணத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியாக இருக்குமா? அல்லது 2015-2018 வரையிலும் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தோடு இணைந்து உருவாக்கிய ஒரு புதிய யாப்புக்கான இடைக்கால வரைபில் காணப்படும் 'எக்கிய ராஜ்ஜிய' என்ற தீர்வா?

இவற்றுடன் மேலும் ஒரு கேள்வியைக் கேட்கலாம். கடந்த 15 ஆண்டுகளில் நடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களின் போதும் தமிழ்த் தரப்பின் ஆதரவைப் பெற்ற ஒரே ஒரு வேட்பாளர்-மைத்திரிபால சிறிசேனதான். அவர் உருவாக்கிய நல்லாட்சி அரசாங்கம் 2015 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தின் படி, நிலைமாறு கால நீதியை நிலைநாட்ட, அதாவது பொறுப்புக் கூறலுக்கு ஒப்புக்கொண்டது. அதன்படி ஒரு புதிய யாப்பை உருவாக்கும் நோக்கத்தோடு நாடாளுமன்றம் சாசனப் பேரவையாக மாற்றப்பட்டது. 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் புதிய யாப்பு ஒன்றுக்கான இடைக்கால வரைபு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அந்த இடைக்கால வரைபின் பெற்றோரில் ஒருவராகிய மைத்திரிபால சிறிசேன அதனைக் காட்டிக்கொடுத்தார். ஒரு யாப்புச் சதி முயற்சி மூலம் அவர் நல்லாட்சி அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சித்தார். இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், 2015 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் அவருக்கு வழங்கிய மிக அரிதான ஒரு மக்கள் ஆணைக்குத் துரோகம் செய்தார். அதாவது தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றதால் ஜனாதிபதியாக வந்த ஒருவர் தமிழ் மக்கள் தனக்கு வழங்கிய மக்கள் ஆணைக்குத் துரோகம் இழைத்தார்.

நல்லாட்சிக் காலத்தில் காணிகள் விடுவிக்கப்பட்டன, கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள் என்று கூறப்படுகிறது. ஆனால் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான சுமார் 10 ஆண்டுகால வளர்ச்சியில் அவை இயல்பாக ஏற்படவேண்டிய மாற்றங்கள்தான். ஆனால், மைத்திரியுடனான சமாதானத்தின் இதயம் என்று கூறத்தக்கது, ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சிதான். ஆனால் அதைத் தோற்கடித்ததே அவர்தான். இவ்வாறான ஏமாற்றகரமான 15 ஆண்டுகளின் பின்னணியில், தமிழ்த் தரப்பின் ஆதரவைப் பெற்று ஜனாதிபதியாக வந்த ஒருவர் மைத்திரியைப்போல மஹிந்தவின் வீட்டில் அப்பம் சாப்பிட்டு விட்டு தலைகீழாக நிற்கமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

மேற்படி கேள்விகளுக்கு பொதுவேட்பாளரை எதிர்க்கும் தரப்புகள் தெளிவான விடைகளை வழங்கவேண்டும். கடந்த 15 ஆண்டுகளிலும் நடந்த எந்த ஒரு பேச்சு மேசையிலும் தொட்டுக்கூடப் பார்க்கப்படாத ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணத்தை இப்பொழுது மீண்டும் ஞாபகப்படுத்த வேண்டிய தேவை என்ன?

அதைக் குறித்து உரையாடவேண்டிய ஒரு காலகட்டத்தில் அதுபற்றி உரையாடப்படவில்லை. தமிழ் மக்களின் நவீன வரலாற்றில் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்தோடு அதிகளவு முன்மொழிவுகள் மேசையில் வைக்கப்பட்ட ஒரு காலகட்டமாக 2018-2021 வரையிலுமான காலகட்டத்தை குறிப்பிடலாம். 2015-2018 வரையிலும் ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெற்றன. இதன்போது தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்கள் பேரவை போன்ற மக்கள் அமைப்புகளும் வெவ்வேறு தீர்வு முன்மொழிவுகளை மேசையில் வைத்தன. தவிர, தமிழ் மக்களிடமும் அது தொடர்பாகக் கருத்து அறியப்பட்டது. அந்த யாப்புருவாக்க முயற்சியைத்தான் மைத்திரி குழப்பினார்.

அதன் பின் கோத்தாபய ராஜபக்ச ஒரு நிபுணர் குழுவை உருவாக்கினார். தமிழ்த் தரப்பு அங்கேயும் யோசனைகளை முன் வைத்தது. இவ்வாறாக நவீன தமிழ் வரலாற்றில் தமிழ் மக்கள் அதிகளவு தீர்வு முன்மொழிவுகளை முன்வைத்த அக்காலகட்டத்தில் ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணத்தைக் குறித்து யாரும் உரையாடவில்லை. இப்பொழுது மட்டும் ஒரு பொது வேட்பாளருக்கு எதிராக ஏன் அந்த ஆவணம் தூசு தட்டி எடுக்கப்பட்டிருக்கிறது? விடுதலைப் புலிகள் இயக்கம் சம்பந்தப்பட்ட ஒரு நிலைப்பாட்டு ஆவணத்தை முன்னிறுத்தினால் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற தெரிவைப் பலவீனப்படுத்தலாம் என்று சிந்திக்கப்படுகின்றதா?

ஆனால் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற தெரிவை முன்வைக்கும் சிவில் சமூகங்கள், தென்னிலங்கையில் உள்ள எந்த ஒரு ஜனாதிபதி வேட்பாளரையும் தாம் நம்பவில்லை என்றுதான் கூறுகின்றன. ஜனாதிபதித் தேர்தலை ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் என்ற அடிப்படையில் அவை நிராகரிக்கின்றன. இது ஏறக்குறைய தேர்தலைப் புறக்கணிக்கும் கட்சியின் நிலைப்பாட்டுக்கு சமாந்தரமானது.

சிவில் சமூகங்களைப் பொறுத்தவரை, தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற தெரிவு தமிழ்த் தேசிய ஐக்கியத்தின் குறியீடு. தமிழ் மக்களை ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் ஒன்றிணைப்பதற்கான ஆகப்பிந்திய முயற்சி. அவ்வாறு தமிழ் அரசியல் சக்தியை, தமிழ் வளத்தை, தமிழ்ப் பலத்தை, ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் ஒன்றிணைப்பது ஏன் தவறானது என்பதற்கு அதை எதிர்ப்பவர்கள் விளக்கம் கூறுவார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org